# உள்ளடக்கம்


**01.அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு** ........ 1

1. 1அறிமுகம் ........ 1

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் ........ 5

1.3 பிரதான செயற்பாடுகள் ........ 6

1.4 அம்பாறை மாவட்ட செயலகத்தினுடைய ஒழுங்கமைப்பு அட்டவணை ........ 7

1..5 மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள் ........ 8

.1.6அமைச்சு / திணைக்களம் / மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள் நிதியங்கள் ........ 9

1.7 வெளிநாட்டு நிதியீட்டத்திலான விபரங்கள் ........ 9

**02. அத்தியாயம் 02 – முன்னேற்றம், சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்** ........ 10

**03. அத்தியாயம் 03 – 2020 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** ........ 13

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று ........ 13

3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று ........ 14

3.4 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று ........ 15

3.5 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் ........ 16

3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை ........ 24

3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ........ 25

3.8 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு 26

3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ........ 28

3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ........ 29

**04. அத்தியாயம் 04 – செயல்திறன் குறிகாட்டி** ........ 40

4.1 நிறுவனத்தினது செயல்திறன் குறிகாட்டி (செயல் திட்டத்தினை அடிப்படையாக கொண்டது) 40

05. **அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி இலக்கு (SDG) அடைவுகளது செயல்திறன்** ........ 41

5.1 அடையாளம் காணப்பட்ட அந்தந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடவும் ........ 41

5.2 நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனை மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குதல் ........ 44

**06. அத்தியாயம் 06 – மனித வள விபரம்** ........ 45

06.1 பதவியணி முகாமைத்துவம் ........ 45

06.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக ........ 45

06.3 மனித வள அபிவிருத்தி ........ 46

**07. அத்தியாயம் 07– இணக்கப்பாட்டு அறிக்கை** ........ 47

**அரசாங்க அதிபரின் செய்தி**



2020 ஆம் ஆண்டின் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் ஆற்றப்படுகின்ற சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களுக்குரிய வருடாந்த செயலாற்றுக்கை அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். 2002.09.12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நிதிக் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

1961 ஆம் ஆண்டில் நிர்வாக மாவட்டமொன்றாக நிறுவப்பட்ட அம்பாறை மாவட்ட வரலாற்றில் அரைவாசிப் பகுதியளவில் பயங்கரவாத யுத்தத்தின் இருள் ஞாபகங்களாலும் இரத்தக்கரைகளாலும் நிரம்பியுள்ளது. அக்காலத்திற்குள் தடங்களுக்கு உள்ளான பிரதேசத்தின் அபிவிருத்திப் பொறிமுறை இதுவரையில் புதிய வடிவத்தினால் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. சிங்கள, தமிழ், முஸ்லிம் சகல தேசிய இனங்களுக்கு உரித்தான மக்கள் ஒன்றாக வாழ்கின்ற அம்பாறை பல்வேறு மத மற்றும் பல்லின கலாசார இனக் கட்டமைப்பைக் கொண்டது. இச் சகல இனத்தவருக்கும் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையிலும் நம்பிக்கையுடனும் ஒருவரையொருவர் போற்றிக் கொண்டு, வாழக்கூடிய சூழலொன்றை இம் மாவட்டத்திற்குள் உருவாக்குதல் எமது அனைவரதும் முக்கிய அபிலாசையொன்றாக இருத்தல் வேண்டும்.

பெரும்பாலான வருடங்களில் இந்நாட்டின் நெல் அறுடையில் உரித்துக்கூறுகின்றதும் தொடர்ச்சியான வருடாந்த கௌபி உற்பத்தியில் இலங்கையின் முன்னனி மாவட்டமாகவும் தேசிய விவசாய உற்பத்தியில் அதிகளவான பகிபங்கிற்கு உரித்துடையதாகவும் உள்ளது. உவர் நீரைப் போன்றே நன்னீர் மீன் வளர்ப்பும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது. பல்வேறு இயற்கை வளங்களினால் நிறைந்ததுள்ள இம் மாவட்டத்தில் உள்ள மக்களில் பெரும்பாலானோர் விவசாயத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். அத்தகைய ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்க்கையை இன்பமுறச் செய்து அவர்களுக்கு மிகவும் சிறந்த எதிர்காலமொன்றை உரித்தாக்கிக் கொடுப்பதற்காக அரச கொள்கைகளை வினைத்திறனாக செயற்படுத்தும் அதிபாரதூரமான பொறுப்பு எமது தோளின் மீது சுமத்தப்பட்டுள்ளது. இப் பொறுப்பினை ஆற்றும் போது இச் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நிர்வாக விடயங்களுக்குத் தேவையான உபதேசங்களை வழங்கிய மாவட்டத்தின் சர்வமதத் தலைவர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய அரசியல் தலைமைத்துவங்களிற்கும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

அரச சேவைகள் கீழ் மட்டத்திற்கு பரவிச் செல்லும்போது மிக முக்கியமான கடமைப்பொறுப்பினை ஆற்றும் பிரதேச செயலகங்களும் அவ் அலுவலகத் தொகுதிக்கிடையே பிணைப்பு மற்றும் முகாமைத்துவத்தை மேற்கொண்டு கடந்த வருடத்தில் எமது இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு உயர்ந்த பங்களிப்பினை வழங்கிய இரு மேலதிக மாவட்ட செயலாளர்கள், பிரதான கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஏனைய பணிப்பாளர்கள், மாவட்ட பொறியியலாளர், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தயோகத்தர்கள் உட்பட முழு பணிற்தொகுதியினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

அத்துடன் கொவிட் - 19 வைரஸ் பரவிச்சென்று கொண்டிருந்த காலப்பகுதியில் தமது சேவைத் தேவைப்பாடு தொடர்பாக கவனத்தைச் செலுத்தி தமது சேவை விடயங்களை அவ் உத்தியோகத்தினர்களினால் ஆற்றியமை தொடர்பாக எனது பாராட்டுகளைத் தெரிவிக்கின்றேன்.



டீ.எம்.எல்.பண்டாரநாயக்க
மாவட்ட அதிபர்/ மாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்

# 01.அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

## *அறிமுகம் 1.1*

பழைய திகாமடுல்ல மக்கள் குடியேற்றத்திற்கு உட்பட்டதான தற்போதைய அம்பாறை மாவட்டமானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இப்பூமியானது இடத்துக்கிடம் மலை செறிந்துள்ள தரையாக உள்ளது. இத் தரையானது கடல் மட்டத்திலிருந்து பொதுவாக 200 அடி வரையிலும், மலை உச்சியிலிருந்து 1000 அடி உயரத்திலும் அமைந்துள்ளது. இது உண்மையிலேயே சகல வளம் நிறைந்த பூமிப் பிரதேசமாக உள்ளது. ஊவாவின் மலைத்தொடரின் மேலால் சூழ்ந்துள்ள இருள் நிறைந்த திரையுடன் ஆரம்பித்து கிழக்கின் கரையோரம் வரைக்கும் தொடர்ச்சியான வயல் நிலமாகும். இப் பிரதேசமானது மனதைக் கவரும் காட்சிகளை காட்டி மிளிர்ந்து கொண்டிருக்கிறது. உரிய காலத்தில் பெய்யும் மழை நீரானது நிறைந்து களப்புப் பிரதேசத்தை அழகுபடுத்துகின்றது. தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும்போது செடிகள் வேளாண்மையால் மூடப்பட்டு பசுமை நிறைந்த சமுத்திரத்தின் அழகை வெளி க்காட்டுகின்றது.

வேளாண்மை வளர்ந்து வரும்போது சிங்களவர், தமிழர், மற்றும் முஸ்லிம் விவசாயிகளின் பறன்கள் வயல் புறங்களில் இடத்துக்கு இடம் தோற்றம் பெறுகின்றது. வயல்களில் உள்ள வேளாண்மைகள் முற்றி வரும்போது தூரத்தில் உள்ள காடுகளில் இருந்து வரும் யானைகள், பன்றிகள், மயில்கள் போன்ற காட்டுப் பிராணிகளை காண முடியும். மீண்டும் அறுவடையை மேற்கொண்ட பின்னர் இப்பூமியானது ஆடுகள், எருமைகள், மாடுகள், போன்றவை கூட்டம் கூட்டமாக நிறைந்து அழகான காட்சியைக் கொடுக்கின்றது. உலர் காலமாகிய ஆவணி மாதம் ஆகும்போது சூரிய ஒளி முழுவதும் இப்பூமியில் பட்டால் எந்தவொரு பிராணிக்கும் புல் தரையில்லாத கடினமான நிலமாக வேகமான காற்று வீசி முழுப் பிரதேசமும் புழுதியால் சூழப்பட்ட பிரதேசமாக மாறிவிடும்.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளரின் கீழ் நாட்டிலுள்ள அதிகாரிகளினால் நிர்வாக கடமைகள் மேற்கொள்ளப்படும் இப்பூமி பிரதேசத்தில் 1924 ஆம் ஆண்டில் வேவ்கம்பத்துவ எனும் புதிய நிருவாக பிரிவு நிறுவப்பட்டது. வாத்தாவ என்பவர் அப்பிரிவின் முதலாவது தலைவராக இருந் ததுடன் புராதன நீர்ப்பாசன வேலைகள் மீண்டும் புனர்நிர்மானம் செய்யும் வேலைகள் அக்காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தியினை உறுதிப்படுத்தி டி.எஸ்.சேனநாயக்கா என்பவர் கல்ஓயா அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார். இவ் விவசாய குடியேற்றத் திட்டத்தின் சிறந்த படைப்பு அம்பாறை மாவட்டமாகும். வேவ்கம்பத்துவ, பின்தன்பத்துவ, பாணம்பத்துவ, சம்மாந்துறைப்பத்துவ, நிந்தவூர்பத்துவ, அக்கரைப்பற்று உள்ளடங்கலாக பழைய நிர்வாக அலகுகளை ஒன்றுசேர்த்து 1961ம் ஆண்டில் அம்பாறை என்ற பெயரில் தனியொரு நிருவாக மாவட்டமாக நிறுவப்பட்டது. 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதி திரு.ஜே.டி.எஸ்.டி.லியனகே என்பவர் இதன் முதலாவது அரசாங்க அதிபராக நிருவாகப் பணிகளை ஆரம்பித்தார் 1980ம் ஆண்டில் மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மகாவலி சி வலயமான தெஹியத்தகண்டி பிரதேசம் இம் மாவட்டத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

தற்போதைய அம்பாறை மாவட்டமானது சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், அம்பாறை ஆகிய தேர்தல் தொகுதிகளையும், 20 பிரதேச செயலக பிரிவுகளையும், 503 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் மற்றும் 614 கிராமங்களையும் உள்ளடங்கியதாக உள்ளது. அதில் 2 மாநகரசபையும் 1 நகரசபையும் 17 பிரதேச சபையும் 14 பொலிஸ் நிலையங்களும் உள்ளன. 115 கி.மீ தூரத்தினைக் கொண்ட அழகு மிக்க கடற்கரையும் இடத்துக்கிடம் அமைந்துள்ள. மலைக்குன்றுகளும் ஊருக்கு ஊர் அமைந்துள்ளன. ஆறுகள், குளங்கள் ஊடாக வரும் நீரினால் செழிப்புற்று வளரும் வயல்வெளி நிலங்கள் வனவிலங்குகள் சுதந்திரமாக நடமாடக்கூடிய காடுகளும் இவ் மாவட்டத்தின் அழகினையும் பெறுமதியினையும் மேலோங்கச் செய்கின்றது. இம் மாவட்டத்தின் பல்லினமத,

பல்லின கலாச்சாரத்தினை வெளிக்கொணரும் 202 விகாரைகளும் 185 இந்து ஆலையங்களும், 332 முஸ்லிம் பள்ளிவாசல்களும், 60 கிறிஸ்தவ தேவாலயங்களும் உள்ளன.

சனத்தொகை புள்ளி விபர தகவல்களுக்கு ஏற்ப (2019 மாவட்ட புள்ளிவிபரவியல் அலுவலகம்) கடந்த வருடத்தில் அம்பாறை மாவட்டத்தில் சனத்தொகையானது 728,086 ஆகும் குடும்பங்களின் எண்ணிக்கை 205,211 ஆகும். இந்த முழுச் சனத்தொகையில் 41.49% முஸ்லிம்களும், 35.32% சிங்களவர்களும், 22.58% தமிழ் மக்களும் ஏனைய இனத்தவர் 0.6% ம் வாழ்வதுடன், இங்கு சகல இனத்தவர்களும் ஒற்றுமையுடனும், சகவாழ்வுடனும் வாழ்ந்து வருகின்றனர். இம் மாவட்டமானது 4,415 சதுரகிலோ மீற்றர் அளவினை கொண்டுள்ளதுடன். இம் மாவட்டத்தின் பயிர் நிலங்களின் அளவு 1,264.47 சதுரகிலோ மீற்றர் ஆகும். நீர்நிலைகள் 328.03 சதுரகிலோ மீற்றரும் வனாந்தரங்களின் (Forest & Range Land) 2,097.53 சதுரகிலோ மீற்றராகவும் உள்ளன. இம் மாவட்டத்தின் வருடாந்த மழை வீழ்ச்சியாக 1,886 மில்லி லீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதுடன் பொதுவான வெப்பநிலை 29.81 செல்சியஸ் மட்டத்தில் உள்ளது.

நாட்டின் மிகப்பெரிய நீர்தேக்கமான சேனநாயக்கா சமுத்திரத்தை அண்டிய நீர்ப்பாசன திட்டத்தினூடாக வளம் பெறுகின்ற நெற்செய்கையில் 22.5% நாட்டின் விவசாயத்துறையில் "ஜாத்தியே வீ பிஸ்ஸ" எனும் பெயரினை ஈட்டிக் கொடுத்ததும் அம்பாறை மாவட்டமாகும். உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் துறைகளினூடாகவும் தேசிய உணவு உற்பத்தியில் முன்னுரிமையை இம்மாவட்டம் பெற்றுக் கொடுத்துள்ளது.

பல்கலைக்கழகம், உயர் தொழில்நுட்ப நிறுவனம், கல்வியற் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிறுவனம் மட்டுமல்லாது தேசிய பாடசாலைகள் உள்ளிட்ட முன்னேற்றமடைந்த பாடசாலை கல்வி நிலையங்கள் ஒன்றிணைந்து கல்வித்துறையின் மிகவும் உயர்ந்த தரத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு அம்பாறை மாவட்டத்திற்கு இயலுமாய் உள்ளது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உற்பத்திதிறன் விருத்தியை பெற்றுக் கொடுப்பதற்கும் சுகாதார சேவைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது மிகவும் சிறந்ததொரு பாக்கியம் என்றே கூற வேண்டும். சுற்றாடல் ரீதியான கவர்ச்சி மிக்க கல்ஓயா தேசிய பூங்கா, குமண தேசிய பறவைப்பூங்கா, லாகுகல தேசிய பூங்கா அறுகம்பை சர்பின் கரையோரம் மட்டுமல்லாது கலாசார ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள ரஜகல, தீகவாபிய, மகுள்மஹா விகாரை, புத்தங்கல, உகந்தை ஆலயம் கடற்கரைப் பள்ளி ஆகியவற்றை உள்ளிட்ட முக்கிய இடங்கள் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் உறைவிடங்களாகவும் மாறியுள்ளது.

**மாவட்டத்தின் சரித்திரப் பின்னனி**

புராதன இலங்கையானது உருகுணை, மாயா, இராஜரட்டை எனும் மூன்று இராட்சியங்களாக இருந்துள்ளது. உருகுணை இராஜதானியின் மிக முக்கிய செல்வந்தமாக கருதப்பட்ட தீகவாபி அல்லது திகாமடுல்ல இராஜதானியின் வரலாறு புத்தர் காலம் வரைக்கும் செல்வதாக சரித்திரச் சான்றுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. வம்சாவழிக் கதைகளின் பிரகாரம் புத்தபெருமான் பரிநிர்வானமடைதலை காட்டுதல் இடம்பெற்ற பொழுது தான் விஜயன் இலங்கைக்கு வந்ததாக கூறப்படுகின்றது. மனிக் அக்கித்த நாகர் அரசரின் அழைப்பில் புத்தபெருமான் மூன்றாவது முறையாக இலங்கைத்தீவிற்கு எழுந்தருளப்பட்ட மங்கள பயணத்தின் போதே தீகவாபியில் எழுந்தருளியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜய மன்னனின் பின்னர் ஆட்சிக்கு வந்த பண்டுகஸ்தேவ மன்னனது காலத்திலே ஆரியர் குடியிருப்பொன்றாக அம்பாறை பிரதேசம் தோற்றமாகியுள்ளது. பண்டுகஸ்தேவ மன்னனது இராணியான கத்தியாயனா குமாரியின் சகோதரனான தியாகு குமாரனால் தோற்றுவிக்கப்பட்ட தியாயுகாமம் பின்னர் தீகவாபி மற்றும் திகாமடுல்ல ஆகிய பெயர்களில் அழைக்கப்படுவதாக வம்சாவழிக் கதைகளில் கூறப்பட்டுள்ளது.

தீககாமினியின் புத்திரரான பண்டுகாவய குமாரனால் அனுராதபுரம் தனது ஆட்சிக்குட்படுத்தப்பட்டு அனுராதபுரத்திலே தலைநகரமும் அமைக்கப்பட்டது. அதிலிருந்து அனுராதபுர பேரரசின் கீழான ஒரு நிருவாகப் பிரதேசமாக திகாமடுல்ல ஆட்சி செய்யப்பட்டதுடன் இது பிரதான தானியக் களஞ்சியமாகவும் விளங்கியது. பொலநறுவை இராஜதானி வீழ்ச்சியடைந்து ஆட்சியதிகாரம் தென்மேல் பிரதேசத்திற்கு தள்ளப்பட்டதுடன் அம்பாறை பிரதேசம் வனமாக தோற்றமாகியது.

மகாசேன மன்னனது பாரிய நீர்ப்பாசன தொழில்துறைத் திட்டம் கிழக்கில் வித்தன்னை பிரதேசத்திலிருந்து தமனகடுவ மற்றும் சேருநுவர ஊடாக கண்டி வரையும் விரிவடைந்திருந்தது. சுய அபிவிருத்தி நடவடிக்கையின் போது உருகுணையை மறக்க முடியாதுள்ளது. நீண்டகாலமாக அபிவிருத்தியடைந்துள்ள நீர்ப்பாசன தொழில்துறை தொடர்பான சிதைவுச் சின்னங்களை அம்பாறை மாவட்டதினுள் சுற்றி வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் காணமுடிகிறது. இலங்கையின் வரலாற்று கல்வெட்டுக்கள் பேணப்படுவதற்கு முன்னர் கல்ஓயா மிட்டியாவத்தை வேடுவ மக்களது உணவு நிலமாக இருந்ததாக பேராசிரியர் ஆர்.எல்.வுறோக்கியரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஆதி ஆரியரினால் நிறுவப்பட்டுள்ள கி.மு.03ம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுக்களில் காணக்கூடியதாக உள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் வரலாறு தொடர்பாக பேசப்படுகின்ற ரஜகல பிரதேசம் பெறுமதிமிக்க சரித்திர ரீதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள ஓர் பிரதேசமாகும். இங்கு காணப்படுகின்ற தாதுகர்ப்ப சிதைவுச்சின்னங்களின் இத்தீவின் வளர்ச்சிக்காக வந்துள்ளது. இட்டித்திய மற்றும் மஹிந்த தேரரர்களின் தாதுகர்ப்பம் என அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது மஹிந்த தேரரின் இலங்கைப்பயணம் மற்றும் அவருடன் வந்த இட்டத்திய தேரர் பற்றியும் மஹாவம்ச செய்தி உறுதிப்படுத்துகின்றது. மஹிந்த தேரர் பரிநிர்வான மடைந்த பின்னர் தந்ததாதுக்கள் புதையலாக வைக்கப்பட்டு நாடுமுழுவதிலும் தாதுகர்ப்பங்கள் கட்டப்பட்டுள்ளதாக செய்திகள் உறுதிப்படுத்துகின்றது. இதனிடையில் ரஜகலயில் கிடைத்துள்ள மற்றுமோர் கடிதத்தில் துட்டகைமுனு மன்னனின் இராணி எனக்கூறப்பட்ட ரபிதா என்னும் பெண்ணைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரித்திர ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கடிதமாகும். அத்துடன் நந்தமித்திரி இராட்சனி மற்றும் துட்டகைமுனு மன்னன் ஆகிய இரண்டு குடும்பங்களுக்குமிடையே விவாக சம்பந்தம் இருந்ததாக சான்று வழங்குகின்ற கல்வெட்டு ரஜகலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டையும் அம்பாறை மாவட்டத்தின் ஒமுனுகல கல்வெட்டையும் ஒன்று சேர்த்துப் பார்க்கின்றபோது துட்டகைமுனு மன்னனின் மகளும் நந்தமித்தரியின் மகனும் விவாகம் செய்து கொண்டதாகவும் சாட்சியமளிக்கின்றது.

தச நூற்றாண்டின் கொண்ட வெட்டுவான் கல்வெட்டை மிக விசேட முக்கியத்துவம் மிக்க சரித்திர ரீதியான மூலாதாரமாக கல்விமான்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அக் கல்வெட்டின் பிரகாரம் அனுராதபுர யுகத்தின் இறுதி அரைவாசி காலகட்டத்தின் போது சச்சிரிய சிங்க அம்பாறையில் வாழ்ந்ததாக தெளிவாக உறுதிப்படுத்தப்படுகின்றது. அதில் கூறிய கிராமம் தன்னிறைவுக் கிராமம் என்றும் விற்பனைக்காக வெளியிலிருந்து பொருட்கள் கொண்டு வர வேண்டியதில்லை என்று பெயரிடப்பட்டுள்ள கற்களையும் கொண்டுள்ளது. அது போலவே இப்பிரதேசம் அனுராதபுர இராஜதானிக்குட்பட்டு ஆட்சி செய்யப்பட்டதற்குமான தகவல்களும் அந்தக்கல்வெட்டிலே சொல்லப்படுகின்றது.

பொலநறுவை யுகத்தின் போது அம்பாறையை முக்கிய இடமாக உரித்தாக்கிக் கொண்டதற்கான சாட்சியங்கள் வரலாற்று ரீதியாக கிடைத்துள்ளது. சோலி ஆதிபத்தியத்திலிருந்து நாட்டைமீட்டெடுத்து நாட்டினை ஐக்கியப்படுத்துவதற்காக மகா விஜயபாகு மன்னனால் (1065-1110) எடுத்துச் சென்ற விடுதலை வியாபாரத்திற்கும் திகாமடுல்ல உதவியளித்துள்ளது. என்பதற்கான தகவல்களும் உள்ளன. திகாமடுல்லையிலே அவரினால் செய்யப்பட்ட போர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுகனா ரபினாவின் ஆதிபத்தியத்திற்கும் திகாமடுல்ல உட்பட்டிருந்ததாக தகவல்களும் கிடைத்துள்ளது மகாபராக்கிரபாகு மன்னன் (1133-1180) தந்ததாதுக்களை பெற்றுக்கொள்ள சுகனா ரபியாவுடன் யுத்தம் செய்ததும் தீகவாபியிலேயே என்று இலங்கை பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றின் ஓர் காலத்தில் தலதா தேரர்களின் உரித்தும் கூட தீகவாபிக்கே உரித்தாகி இருந்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

கீர்த்திசிறிராச சிங்கன் அரசன் 1756 வருடங்களில் தீகவாபிக்கு வந்து தீகவாபி தாதுகர்ப்பத்தை புணரமைப்புச் செய்து அவ்விகாராதிபதி வந்திகொட நிக்றோத நாயக்க தேரருக்கு பூசையும் செய்துள்ளதாக தீகவாபி அரும்பத விளக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்தி வம்சாவழி செய்திகளினாலும் உறுதிப்படுத்தப்படுவதுடன் தீகவாபி தாதுகர்பத்தின் மேற்கு வாசலிலே

அண்மைக்காலம் வரையும் தெரிந்து கொள்ளக்கூடியதாக காணப்பட்ட அழகொழிந்து போயுள்ள சித்திரக் குறிப்புக்கள் கண்டி யுகத்திற்குரிய சித்திர சம்பிரதாயத்திற்கு உரித்தானதெனவும் தெரியவந்துள்ளது. 1818க்கு பின்னர் அம்பாறை பிரதேசத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வொன்றாக சுட்டிக்காட்ட முடிவது நீர்ப்பாசன தொழிற்துறையின் அபிவிருத்தியின் போது பிரித்தானியர்கள் காட்டியுள்ள பங்களிப்பாகும் விசேடமாக 1853ல் சேர் ஹென்றி றொட் ஆளுணர் அவர்கள் கிழக்கு மாகாணத்திற்கு வருகைதந்து இந்த பிரதேசத்தின் நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திக்காக பணம் வழங்கி வைத்ததன் முக்கியத்துவம் தொடர்பாக விளங்கிக்கொண்டு அக்கால பிரித்தானிய அரசும் நீர்ப்பாசன தொழில்துறையை புணரமைப்பதற்காக பணம் வழங்கி முதலீடு செய்வதற்கான காரணமாக அமைந்திருந்தது.

இதன் கீழேயே அம்பாறை மாவட்டத்திற்குரித்தான திவுலானை சடயந்தலாவை மற்றும் சாகாமம் போன்ற நீர்த்தேக்கங்கள் புணரமைப்பு செய்தலும் 1880 தசாப்தத்தின் போது பட்டிப்பளை ஆற்றுத்திட்டம் ஆரம்பிப்பும் விசேடமாக நிகழ்ந்துள்ளது. பட்டிப்பளை ஆற்றுத்திட்டத்தின் கீழ் அம்பாறைக்குளம் கொண்டவெட்டுவான் குளம் போன்ற நீர்நிலைகளும் கல்ஓயா கங்கை நடுவே அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டும் 40000 ஏக்கர் அளவில் பயிர்ச்செய்கைக்கான நீரை வழங்கலுடன் பாரிய வயல் வெளியாகவும் இலங்கைத் தீவில் அம்பாறை மாவட்டத்திலே காணப்படுகின்றது.

இதன்பின்னர் 1930ம் தசாப்தத்தின் போது கல்ஓய நீர்ப்பாசனத்திட்டம் தொடர்பாக அடிப்படையான நோக்கங்கள் திரு. ஹேன்றி நீர்ப்பாசன பணிப்பாளரினால் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் மீண்டும் ஒருமுறையாக கிழக்கிலே அம்பாறை அபிவிருத்தியின் மத்திய நிலையமாக ஆக்கப்பட்டது. விசேடமாக நீர்ப்பாசன தொழிற்துறை வரலாற்றில் புதிய நிலைப்பாட்டினை ஆரம்பித்து உயர்நிலத்தைச் சார்ந்ததாக ஆழமான நீர்தேக்கங்கள் அமைத்து நீர்ப்பாசனத்திற்கு தேவையான நீரை வழங்கும் வழிமுறைகளை திட்டமிடுதல் கல்ஓய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் கீழேதான் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பிரித்தானியர் ஆட்சியில் புதிய அத்திவாரத்தை அமைத்துக் கொள்வதற்காக உதவியளித்துள்ள கோல்புறூக்கமரன் திட்டத்திற்கமைய 05 மாகாணங்களாக இலங்கை பிரிக்கப்பட்டது. அதிலே அம்பாறை பிரதேசம் கிழக்கு மாகாணத்திற்குள் அடங்கியிருந்தது. கிழக்கு மாகாணம் திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களையும் தமன்கடுவ, விந்தன்ன ஆகிய பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட மாகாணங்கள் மீண்டும் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டது. அதற்கமைய கிழக்கு மாகாணமானது திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைக் கொண்டமைந்ததாகும். இதிலே மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளே திகாமடுல்லையும், விந்தனையும் அமைந்திருந்தது. 1837ல் விந்தனை பதுளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. 1961 ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்டம் நிறுவப்படும் வரைக்கும் திகாமடுல்ல நிர்வாக பிரிவுகளுக்கு ஆளாக்கப்படவில்லை

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

**நோக்கம்**

புதுமை மிக்க சமுதாயத்தினைக் கொண்ட வள மிக்கதோர் மாவட்டம்

**பணிகள்**

மாவட்டத்திலுள்ள வளங்கள் முழுவதையும் நல்லாட்சிப் பொறிமுறையின் ஊடாக முகாமைத்துவப்படுத்தி நிலையான அபிவிருத்தியினை முன்னெடுத்துக் கொண்டு சுதந்திரமானதும், பாதுகாப்பான மனம் கவர்ந்த சூழலில் அறிவு, திறமை, ஆக்கம் மற்றும் சுகதேக தன்மை நிறைந்த மிகவும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினைக் கொண்ட மக்களை உள்ளடக்கிய வள மிக்க மாவட்டத்தினை கட்டியெழுப்புதல்

**பிரதி பலன்கள்**

- உணர்ச்சி பூர்வ மிக்க அரச சேவை குழாத்தினரை தேடிவரும் அனைவருக்கும் மனதை கவரும் விதத்தில் புதுமை மிக்க நம்பிக்கையான சேவை
- புதுமையை தேடிச் சென்று உடனடியாக தீர்வுகாண முயலும் பணிக் கலாச்சாரம்.
- தூய்மையான மற்றும் பசுமை மிக்க சூழலினூடாக அத்தியவசியமான தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளும் அழகு மிக்க சூழல்
- நல்லாட்சிக்கு இட்டுச் செல்லல்

## *1.3 பிரதான செயற்பாடுகள்*

**அம்பாறை மாவட்ட செயலக நிருவாக பிரிவின் கடமைகளும் பொறுப்புக்களும்**

- அலுவலக நிருவாக நடவடிக்கைகள்
- நிருவாக பொறுப்புக்கள், நிருவாக விடுமுறை, மற்றும் புகையிரத பயணச்சீட்டு
- பிரதேச செயலகங்களின் நிருவாக நடவடிக்கைகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளும்
- கிராம உத்தியோகத்தர்களின் நிருவாக நடவடிக்கைகள்
- நெல் கொள்வனவு தொடர்பான நடவடிக்கைகள்

**மாவட்ட செயலக நிருவாக மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் கடமைகளும் பொறுப்புக்களும்**

- அலுவலக நிருவாக நடவடிக்கைகள்
- சமூக சேவை நடவடிக்கைகள்
- கலாச்சார மற்றும் மத நடவடிக்கைகள்
- மனித வள அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் அபிவிருத்தி பயிற்சி நடவடிக்கைகள்
- பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவாளர் மற்றும் திடீர் மரண விசாரணையாளர்களை நியமிப்பு செய்வது தொடர்பான நடவடிக்கைகள்
- ஜூரிமார்களின் பெயர் அட்டவணையை தயாரித்து நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
- மாவட்ட மட்டத்தில் தேசிய நிகழ்வுகள் மற்றும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தல்
- பொதுமக்கள் தொடர்பிலான முறைப்பாட்டு நடவடிக்கைகள்
- தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை மக்களுக்கு வழங்குதல்
- அனர்த்தம் மற்றும் சுனாமி மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள்
- சுடுகலன் மற்றும் வெடிபொருட்களுக்கான அனுமதிப்பத்திர நடவடிக்கைகள்
- சுற்றுலா விடுதி தொடர்பான நடவடிக்கைகள்

# *1.4 அம்பாறை மாவட்ட செயலகத்தினுடைய ஒழுங்கமைப்பு அட்டவணை*



## 1.5 மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள்

அம்பாறை நகர மையத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் வடக்கில் மாவட்ட செயலகம் அமைந்துள்ளது. மாவட்டத்தினுடைய நிருவாகத்திற்குரிய பாரிய கடமைப் பொறுப்புக்கள் இவ் அலுவலகம் மூலம் செய்யப்படுகின்றன. மாவட்ட செயலகம் அமைந்துள்ள கட்டடம் உறுதியானதும், கருங்கல்லினாலும் அமைக்கப்பட்ட பழங்காலக் கட்டடமாக இருப்பதுடன் அது கல்லோயத் திட்டத்தின் கீழே ஸ்தாபிக்கப்பட்டது. அதிகமானவர்களினால் இது அம்பாறை கச்சேரி என அழைக்கப்படுகின்றது. மாவட்ட செயலகத்தின் கீழ் 20 பிரதேச செயலகங்கள் உள்ளன. அப்பிரதேச செயலகங்களின் 503 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகின்றன அவை பின்வருமாறு

| இல | பிரதேச செயலகம் | கி.சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | மாவட்ட செயலகத்தில் இருந்து பிரதேச செயலகத்திற்கான தூரம்(KM) |
|---|---|---|---|
| 01 | தெகியத்தக்கண்டிய | 13 | 121 |
| 02 | பதியத்தலாவ | 20 | 82 |
| 03 | மகாஓயா | 17 | 62 |
| 04 | உகண | 55 | 11 |
| 05 | அம்பாறை | 22 | - |
| 06 | தமன | 33 | 17 |
| 07 | லாஹுகல | 12 | 80 |
| 08 | பொத்துவில் | 27 | 75 |
| 09 | திருக்கோவில் | 22 | 42 |
| 10 | ஆலையடிவேம்பு | 22 | 28 |
| 11 | அக்கரைப்பற்று | 28 | 28 |
| 12 | அட்டாளைச்சேனை | 32 | 29 |
| 13 | இறக்காமம் | 12 | 10 |
| 14 | நிந்தவூர் | 25 | 26 |
| 15 | காரைதீவு | 17 | 24 |
| 16 | சாய்ந்தமருது | 17 | 25 |
| 17 | கல்முனை | 29 | 28 |
| 18 | கல்முனை வடக்கு (உபசெயலகம்) | 29 | 28 |
| 19 | நாவிதன்வெளி | 20 | 24 |
| 20 | சம்மாந்துறை | 51 | 20 |

## *1.6. அமைச்சு / திணைக்களம் / மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள் நிதியங்கள்*

இந்த கச்சேரி வளவினுள் பல்வேறுபட்ட திணைக்களகங்களின் அலுவலகங்கள் மற்றும் பல்வேறுபட்ட பிரிவுகளும் காணப்படுகின்றன அவையாவன,

| | |
|---|---|
| 1. | மாவட்ட சமுர்த்தி அலுவலகம் |
| 2. | மாவட்ட திட்டமில் பிரிவு |
| 3. | உதவிதேர்தல் ஆணையாளர் அலுவலகம் |
| 4. | மாவட்ட வாகனப் போக்குவரத்து அலுவலகம் |
| 5. | மாவட்ட அளவை, நிறுவை மற்றும் சேவைகள் திணைக்கள அலுவலகம் |
| 6. | மாவட்ட புள்ளிவிபரவியல் பிரிவு |
| 7. | அனர்த்த முகாமைத்துவ பிரிவு |
| 8. | மாவட்ட விளையாட்டு பிரிவு |
| 9. | பிரதி காணி ஆணையாளர் அலுவலகம் |
| 10. | மாவட்ட காணி சீரமைப்பு சபை |
| 11. | மாவட்ட சமூகப் பாதுகாப்பு சபை |
| 12. | உதவி காணியாளர் அலுவலகம் (மாகாணம்) |
| 13. | மாவட்ட காணி பயன்பாட்டு மற்றும் திட்டமிடல் திணைக்கள அலுவலகம் |
| 14. | மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் |
| 15. | விவசாயத் திணைக்களத்தின் விதை உறுதிப்படுத்தும் அலுவலகம் |
| 16. | ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கிழக்கு மாகாண அலுவலகம் |

## *1.7 வெளிநாட்டு நிதியீட்டத்திலான விபரங்கள்*

NIL

# 02. அத்தியாயம் 02 – முன்னேற்றம், சிறப்பு அடைவுகள்இ சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

**2020 ஆம் ஆண்டிற்கான அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்**

2020 ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய வருடாந்த செயலாற்றுகை கீழே சமர்ப்பிக்கப்படுகின்றது.

**2020 ஆம் ஆண்டின் செயலாற்றுகை**

i. பொலிஸ், இராணுவம் மற்றும் சுகாதாரத்துறையுடன் இணைந்து கொவிட்-19னை கட்டுப்படுத்த, வழிநடத்தல் குழுக்களை நிறுவி மாவட்டத்திற்குள் கொரோனா வைரஸ் பரவுவதை வெற்றிகரமாக கட்டுப்படுத்துவதற்கு முடிந்தமை.

ii. வருடத்தில் ஆரம்பப் பகுதியில் காணப்பட்ட தனிமைப்படுத்தல் மற்றும் ஊடரங்குச் சட்டத்திற்கு மத்தியில் அரசாங்க ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி, தகமையுடைய முதியோர் மற்றும் அங்கனவீனர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ரூ.5000.00 கொடுப்பனவை வெற்றிகரமாக வழங்கியமை.

iii. விவசாயத்தில் ஈடுபட்டவர்களுக்கு உரமானிய கொடுப்பனவு மற்றும் விவசாய உள்ளீடுகளை உரிய நேரத்திற்குள், தொடர்ச்சியாக வழங்கியதுடன் விவசாய செய்கையை வெற்றிகரமாக பேணிச் சென்றமை.

iv. விவசாயிகளின் பழுதடைந்த உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை சீர் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை.

v. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காணப்பட்ட கால எல்லைக்குள் பிரதேச மக்களுக்கு தட்டுப்பாடின்றி அத்தியவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடிந்தமை.

vi. பிரதேசத்தின் மேலதிக உணவுப் பொருட்களை வேறு மாவட்டத்துடன் பரிமாற்றம் செய்து கொண்டதுடன் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கும் தட்டுப்பாடின்றி விநியோகிப்பதற்கு முடியுமாக இருந்தமை.

vii. மாவட்டத்தின் மேலதிக உணவு உற்பத்தியான சீனி மற்றும் அரிசி முதலானவற்றை கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற கஷ்டப் பிரதேசங்களுக்கு வழங்கி ஏனைய மாவட்டங்களுக்கு உதவ முடிந்தமை.

viii. கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார்த்துறையினை ஒருங்கிணைப்புச் செய்து விநியோக நடவடிக்கையை வெற்றிகரமாக ஆற்றியமை.

ix. சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கும் பொருளாதார கஷ்டங்கள் உள்ள பொதுமக்களுக்கும் தேவையான முகக்கவசம், சனிடைசர் போன்ற சுகாதார பாதுகாப்புப் பொருட்களை கொடையாளிகள், அனுசரணையாளர்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்பாளர்களைப் கொண்டு வழங்கியமை.

x. Covid – 19 பாதிப்பிற்குள்ளான போதும் மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு முடிந்தமை.

xi. மரநடுகை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு விடயங்களுக்கு வெற்றிகரமான முறையில் பங்களிப்புச் செய்ய முடிந்தமை.

xii. 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வன்முறைச் செயல்களைக் குறைத்து மிகவும் அமைதியானதும் வெற்றிகரமானதுமான வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய முடிந்தமை.

xiii. பல்லின மற்றும் பல்வேறுபட்ட மத சூழலுக்குள் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என சகல மத மறுமலர்ச்சிக்காகவும் நேரடியாகத் தலையிட்டு செயற்பட முடிந்தமை.

xiv. பொலிஸ், இராணுவ மற்றும் அரசாங்க அதிபர் போன்றோரின் மேற்பார்வையின் கீழ் வரலாற்று சிறப்புமிக்க திகவாபி விகாரையின் அகழ்வு விடயங்களின் போது கண்டெடுக்கப்பட்ட 1800 வருடங்கள் பழமை வாய்ந்த கல்லால் செதுக்கப்பட்ட பெட்டி, புனித எலும்புத்துண்டுகள் முதலான தொல்பொருள் ஆதாரங்களை வெற்றிகரமாக கையாள முடிந்தமை.

xv. வரலாற்றுச் சிறப்புமிக்க தீகவாபியின் புனித பூமியில் கண்டறியப்பட்ட புனித நினைவுச் சின்னங்களை 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் முறையான சடங்குகளைச் செய்து பக்தர்களுக்கு வணங்குவதற்கான நடவடிக்கையை இதுவரை எடுத்தமை.

xvi. வருட இறுதியில் கிழக்கு மாகாணத்திற்கு தாக்கம் செலுத்துகின்ற வடகிழக்கு பருவ மழையின் பாதிப்பால் ஏற்பட்ட கிட்டங்கி குளத்தின் நீர் பெருக்கெடுத்தல் அனர்த்த நிலமைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்ததுடன், விபத்துக்குள்ளானவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையையும் வெற்றிகரமாக மேற்கொண்டமை. அத்துடன் நீரப்பாசன திணைக்களத்துடன் இணைந்து செயலற்றுக் காணப்பட்ட வாய்க்கால்களை சுத்தம் செய்ததுடன், அணைக்கட்டுகளை சீர் செய்து அனர்த்த நிலமையைக் கட்டுப்படுத்தியமை.

xvii. நெல் கொள்வனவு செய்யும் பணியின் போது 1295,203 மெட்ரிக் டொன் அளவிலான நெல் கொள்வனவு செய்தலை மேற்கொண்டு அதிகரித்துக் காணப்பட்ட அரிசியின் விலையை சமநிலைப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்ய முடிந்தது.

xviii. சப்ரிகம கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், மீளக் குடியமர்த்தும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், சுற்றுலாக் கைத்தொழிலை முன்னேற்றும் வேலைத்திட்டங்கள், கிராம சக்தி வேலைத்திட்டங்கள் போன்ற சகல அபிவிருத்தி விடயங்களுக்கும் வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளை பயன்படுத்தி அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றியமை.

xix. மாவட்டத்தின் அபிவிருத்தி விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை உச்ச அளவில் பயன்படுத்தி வெற்றிகரமாக மாவட்டத்தின் அபிவிருத்திற்கு பங்களிப்புச் செய்ய முடிந்தமை.

**செயலாற்றுகை நிறைவேற்றுகின்ற போது ஏற்பட்ட சவால்கள்**

I. விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் போது ஏற்பட்ட நீர் பெருக்கெடுத்து ஓடல் போன்ற அனர்த்த நிலமையின் கீழ் சிறந்த முகாமைத்துவத்துடன் செயற்படுவதற்கான தேவை ஏற்பட்டமை.

II. Covid – 19 வைரஸ் நிலமை மாவட்டத்திற்குள் பரவியமை.

III. கஷ்டமான பிரதேச செயலகங்களினை குறைந்த வசதிகள், குறைந்த ஆளணியினரின் கீழ் நிர்வகித்துச் செல்வதற்கு நேரிட்டமை.

**எதிர்கால நோக்கம்**

i. தன்னிறைவடைந்த நாடொன்றை நோக்கிச் செல்லும் பயணத்தில் 23% அளவிலான மாவட்ட அரிசி உற்பத்தியை 25% வரை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ii. இடைக்கால உற்பத்தியான கௌபி, பயறு, பால் போன்ற உற்பத்திகளின் இயலளவை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iii. யானை வேலி அமைப்பதனூடாக யானை - மனிதன் பிரச்சினையைக் குறைத்தல்.

iv. மூலப்பொருட்களை முடிவுப் பொருட்களாக மாற்றி பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பெண் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கையை ஏற்படுத்தல்

v. மர நடுகைப் பணிகளை முன்னேற்றி கொண்டு மாவட்டத்தில் காடுகளை 3% ஆல் உயர்த்துதல்.

vi. மாவட்டத்தில் காணப்படுகின்ற வறட்சியான காலனிலை நிலமைக்கு அமைய சூரிய வெளிச்சத்தின் உதவியால் மின்சார உற்பத்திற்கு பங்களிப்புச் செய்தல்.

vii. இதுவரையில் தேசிய ரீதியில் உயர்ந்த மட்டத்தில் பேணிச் செல்லப்படுகின்ற நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் உள்ளவர்களின் அளவை உயர்த்தி நன்னீர் மீன் வளர்ப்பில் நாட்டில் முதலிடத்திற்கு வரல்.

viii. கவர்ச்சிகரமான இடங்களை முன்னேற்றம் செய்து சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதன் மூலம் அம்பாறை மாவட்டத்தில் அத்தகைய தொழில்களில் ஈடுபடுகின்ற முதலீட்டாளர்களின் வருமானத்தை உயர்த்துதல்.

ix. இதுவரையில் திட்டமிடப்பட்டுள்ள நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தி முறையானதும் அழகானதுமான நகரத்தை மாவட்டத்திற்குள் உருவாக்குதல்.

x. மாவட்டத்தின் பிரதான விவசாய உற்பத்திகளான அரிசி, சோளம், பசும்பால் மற்றும் மீன் வளர்ப்பு என்பவற்றை பயன்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கு முதலீட்டாளர்களை வரவழைத்து மாவட்டத்தின் உற்பத்தியை உயர்த்துதல்.



டி.எம்.எல்.பண்டாரநாயக்க,
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
அம்பாறை.

# 03. அத்தியாயம் 03 – 2020 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 *நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | ஏசீஏ-எப் |
| | 2020 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று | | | | |
| | | | உண்மை நிலை | ரூபா | |
| பாதீட்டு 2020 | | குறிப்பு | 2020 | 2019 | |
| - | **வருமானப் பெறுகைகள்** | | | | ஏசீஏ-1 |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர்பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | |
| - | லரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (A)** | | - | - | |
| | **வருமான பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி பணி முற்பணங்கள் | | 4,737,886,844 | 5,472,263,988 | ஏசீஏ-3 |
| - | வைப்புக்கள் | | 1,281,172,265 | 1,010,042,555 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 51,871,861 | 57,686,391 | ஏசீஏ-5/5ஏ |
| 34,100,000 | ஏனைய பெறுகைகள் | | 557,983,460 | 387,032,340 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள்(B)=(A+B)** | | **6,628,914,430** | **6,927,025,274** | |
| **34,100,000** | **மொத்த வருமானம C=(A)+(B)** | | **6,628,914,430** | **6,927,025,274** | |
| | **கழி : செலவினங்கள** | | | | |
| | **மீண்டும்வரும் செலவினம்** | | | | |
| | சம்பளம்,கூலி,மற்றும் ஊழியர் அனுகூலங்கள் | 5 | 877,647,057 | 765,520,841 | ஏசீஏ-2(ii) |
| 881,058,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 111,102,181 | 133,177,629 | |
| 134,187,000 | மானியங்கள் ,கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 4,085,699 | 4,037,717 | |
| 4,255,000 | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டும்வரும் செலவினம் | 9 | - | - | |
| **1,019,500,000** | **மொத்த மீண்டும்வரும் செலவினம்(D)** | | **992,834,937** | **902,736,187** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும்,மேம்படுத்தலும் | 10 | 9,812,386 | 13,546,990 | ஏசீஏ-2(ii) |
| 10,198,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 48,429,153 | 36,371,774 | |
| 48,436,000 | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| - | மனித வள அபிவிருத்தி | 14 | 397,059 | 1,300,264 | |
| 566,000 | ஏனைய மூலதன செலவினங்கள் | 15 | - | 2,675,592 | |
| **59,200,000** | **மொத்த மூலதனம் செலவினம் (E)** | | **58,638,598** | **53,894,620** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (F)** | | **1,478,471,299** | **964,939,853** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 1,430,153,353 | 891,585,582 | ஏசீஏ-4 |
| - | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 48,317,946 | 73,354,271 | ஏசீஏ-5/5ஏ |
| 60,000,000 | **மொத்த செலவிம G=(D +E+F)** | | **2,529,944,834** | **1,921,570,659** | |
| | | | | | |
| - | **2020 டிசம்பார் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி H=(C-G)** | | **4,098,969,596** | **5,005,454,615** | |

## 3.3 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ-பீ

மாவட்ட செயலகம்- அம்பாறை

### 2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|---|
| <u>நிதி சொத்துக்கள் அற்றது</u> | | | |
| ஆதனம்,பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 1,427,194,087 | 1,377,458,356 |
| <u>நிதி சொத்துக்கள்</u> | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 207,910,788 | 211,475,953 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | **1,635,104,875** | **1,588,934,309** |
| தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு | | | |
| தேறிய பெறுமதி | | (1,141,665) | (150,657,709) |
| ஆதனம்,பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,427,194,086 | 1,377,458,356 |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 209,052,454 | 358,033,542 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | 4,100,120 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | **1,635,104,875** | **1,588,934,309** |

பக்க இலக்கம் 01 முதல் 23 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 5 வரையான மாதிரிப்படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத்தகவல்கள் மற்றும் குறிப்புக்களின் பக்க இலக்கம 24 முதல் 31 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்தக குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூறுகளின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆதனால் மேலே உள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேறிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகிறது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகின்றோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) WWV RWP RSP USP ndc psc MPhil
செயலாளர் தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜங்க அமைச்சு
திகதி: 2021.02. 12

General Kamal Gunaratne (Retd)
WWV RWP RSP USP ndc psc MPhil
Secretary
State Ministry of National Security, Home Affairs and Disaster Management

கணக்கீட்டு உத்தியோகத்தர்
டீ.எம் எல். பண்டாரநாயக்க
மாவட்ட செயலாளர்
திகதி: 2021.02. 12

D.M.L. Bandaranayake
Government Agent
District Secretary
Ampara District

பிரதான கணக்காளர்
எம்.ஐ.எம்.முஸ்தபா
திகதி: 2021.02. 12

M.I.M. Musthafa
Chief Accountant
District Secretariat
Ampara

3.4 ***காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று***

**ஏசீஏ-சீ**

## 2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான
## நிதி நிலைமைக் கூற்று

| | உண்மை | ரூபா. |
|---|---|---|
| | **2020** | **2019** |
| <u>**தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்**</u> | | |
| மொத்த வரிப் பணம் | - | - |
| கட்டணங்கள்,தண்டப்பணங்கள்,தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம | 557,983,460 | 387,032,340 |
| கிடைக்கப பெற்ற கட்டுநிதி | 4,737,886,844 | 5,472,263,988 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு | **5,295,870,305** | **5,859,296,328** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 987,997,273 | 897,315,780 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 4,085,699 | 4,037,717 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேறகொள்ளப்பட்ட செலவீனம | 2,553,362,495 | 1,968,135,350 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | **18,000,000.00** | - |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **3,563,445,467** | **2,869,488,846** |
| **தொழிற்டு செயற்பாடுகளிலிருந்தான வருமானமதறிய காசுப் பாய்ச்சல் (இ)ஙீ(அ)-(ஆ)** | **1,732,424,838** | **2,989,807,482** |
| <u>**முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்**</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| முற்பணங்களிலிருது அறவ்டப்படல்வ | 66,243,356 | 73,093,054 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசு (ஈ)** | **66,243,356** | **73,093,054** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 1,583,831,363 | 3,078,979,070 |
| முற்பணக் கொடுப்பனவுள | 65,855,743 | 98,220,219 |
| <u>**முதலீட்டு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)**</u> | **1,649,687,106** | **3,177,199,289** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)ஙீ(ஈ)-(உ)** | **(1,583,443,750)** | **(3,104,106,235)** |
| | - | - |
| **தொழிற்பாடு மற்றும் மதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்(எ)ஙீ(இ-ஊ)** | **148,981,088** | **(114,298,753)** |
| <u>**நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்**</u> | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| கிடைக்கப்பெற்ற வைப்புகள் | 1,281,172,265 | 1,010,047,714 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **1,281,172,265** | **1,010,047,714** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| உள்ளுர் கடன் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புகளின கொடுப்பனவு | 1,430,153,353 | 891,648,741 |
| **நிதிச் செயற்பாடுகளில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **1,430,153,353** | **891,648,741** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)ஙீ(ஏ)-(ஐ)** | **(148,981,088)** | **118,398,973** |
| | 0 | |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஙீ(எ)-(ஒ)** | - | 4,100,220 |
| **ஜனவரி 01 ஈம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | (100) |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **4,100,120** |

## 3.5 *நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்*

ஏசீஏ-1

**2020 டிசம்பா 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று**

அரசிறை கணக்கீட்டு உத்தியோகத்தா: செலவின தலைப்பு இல:270

ரூபா.

| அரசிறை குறியீடு | வருமானத் தலைப்பு | அரசிறை மதிப்பீடு (1) | | அரசிறை சேகரிப்பு | | | நிலுவை வருமானங்களைச் சேகரித்தல (3) | வருமானத்திலிருந்து மீளச்செலுத்துதல் | | | தேசிய அரசிறை 5=2(iii)+4(iii) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு 1(i) | திருத்திய மதிப்பீடு 1(ii) | தொடர்புடைய அமைச்சினால் / திணைக்களத்தினால் திரட்டப்பட்டது 2(i) | ஏனைய அமைச்சினால் / திணைக்களத்தினால் திரட்டப்பட்டது 2(ஹை) | மொத்தம் 2(iii)=2(i)+2(ii) | | காசாக 4(i) | தவறுகளைத் திருத்துதல் 4(ii) | மொத்தம் 4(iii)=4(i)+4(ii) | |
| | | இல்லை | | | இல்லை | | | | | | |
| | முழுமொத்தம் | | | | | | | | | | |

வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்
டீ.எம் எல். பண்டாரநாயக்க
மாவட்ட செயலாளர்
திகதி: 2021.02. 20

D.M.L. Bandaranayake
Government Agent
District Secretary
Ampara District

5

பிரதான கணக்காளர்
எம்.ஐ.எம்.முஸ்தாபா
திகதி: 2021.02. 12

M.I.M. Musthafa
Chief Accountant
District Secretariat
Ampara

## 2020 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 270

அமைச்சின்/திணைக்களத்தின்/மாவட்ட செயலகம் அம்பாறை

ரூபா.

| செலவினக் குறியீடு | நிதியிடல் மூலம் (குறியீட்டு இல) | ஏற்பாடுகள்: வருடாந்த வரவு செலவு ஏற்பாடு (1) | ஏற்பாடுகள்: குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2) | ஏற்பாடுகள்: நி.ஒ66/69 மாற்றல்கள் | ஏற்பாடுகள்: மொத்தத் தேறிய ஏற்பாடு | செலவினம்: காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம் | செலவினம்: நி.ஒ.208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ள | செலவினம்: மொத்தச் செலவினம் 7ஓ(5)(6) | தேறிய விளைவு: சேமிப்பு/மிகை | தேறிய விளைவு: திருத்தப்பட்ட மதிப்பீட்டின் சதவீதமாக சேமிப்பு/மிகை | வேறுபாட்டுக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம் நிகழ்ச்சித் திட்டம் (1)** | | | | | | | | | | | |
| குறிப்பு - 5 கூலி,சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் செலவு விடயரீயான வகுப்பீடு | | | | | | | | | | | |
| **ஆளுக்குரிய வேதனங்கள்** | | | | | | | | | | | |
| 1001 சம்பளமும் கூலியும் | 11 | 616,322,000 | - | - | 616,322,000 | 604,278,699 | - | 604,278,699 | 12,043,301 | 2 | சாதாரண சேமிப்பு. |
| 1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள் | 11 | 34,626,000 | - | 6,500,000 | 41,126,000 | 41,090,718 | - | 41,090,718 | 35,282 | 0 | சாதாரண சேமிப்பு. |
| 1003 ஏனைய கொடுப்பனவுகள் | 11 | 230,110,000 | - | (6,500,000) | 223,610,000 | 211,196,332 | 751,965 | 211,948,297 | 11,661,703 | 5 | அடிப்படை சம்பளத்தில் கொடுப்பனவு சேர்க்கப்பட்டது |
| மொத்தம் | | 881,058,000 | - | - | 881,058,000 | 857,317,714 | 751,965 | 857,317,714 | 23,740,286 | | |
| குறிப்பு - 6- செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் அனுகூலங்க் செலவு விடயரீயான வகுப்பீடு | | | | | | | | | | | |
| **பிரயாணச் செலவினம்** | | | | | | | | | | | |
| 1101 உள்ளூர் | 11 | 20,502,000 | - | - | 20,502,000 | 20,329,343 | - | 20,329,343 | 172,657 | 1 | சாதாரண சேமிப்பு. |
| மொத்தம் (அ) | | 20,502,000 | - | - | 20,502,000 | 20,329,343 | - | 20,329,343 | 172,657 | | |
| 1201 எழுதுகருவிகளும் அலுவலக உபகரண | 11 | 16,724,000 | - | - | 16,724,000 | 16,566,092 | - | 16,566,092 | 157,908 | 1 | செலவுகளை மீதான கட்டுப்பாடு கோவிட் -19 வைரஸ் நிலை |
| 1202 எரிபொருள் | 11 | 14,282,000 | - | (600,000) | 13,682,000 | 13,453,367 | - | 13,453,367 | 228,633 | 2 | காரணமாக கள கடமைகளை குறைத்தல். |
| 1203 உணவும் சீருடை | 11 | 365,000 | - | - | 365,000 | 346,000 | - | 346,000 | 19,000 | 5 | தகுதியுடைய விண்ணப்பந்தாரிகளின் குறைவு |
| மொத்தம்(ஆ) | | 31,371,000 | - | (600,000) | 30,771,000 | 30,365,458 | - | 30,365,458 | 405,542 | | |
| **பொறி,இயந்திரம்,உபகரணம்** | | | | | | | | | | | |
| 1301 வாகனங்கள் | 11 | 16,620,000 | - | - | 16,620,000 | 16,214,614 | - | 16,214,614 | 405,386 | 2 | செலவுகள் மீதான கட்டுப்பாடு கொடுப்பனவுக்கான தேவை |
| 1302 பொறி,இயந்திரம்,உபகரணம் | 11 | 4,372,000 | - | - | 4,372,000 | 4,216,253 | - | 4,216,253 | 155,747 | 4 | ஏற்படாமை |
| 1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 11 | 12,403,000 | - | - | 12,403,000 | 12,303,269 | - | 12,303,269 | 99,731 | 1 | சாதாரண சேமிப்பு. |
| மொத்தம்(இ) | | 33,395,000 | - | - | 33,395,000 | 32,734,136 | - | 32,734,136 | 660,864 | | |
| **சேவைகள்** | | | | | | | | | | | |
| 1402 போக்குவரத்து | 11 | 6,064,000 | - | 600,000 | 6,664,000 | 6,622,630 | - | 6,622,630 | 41,370 | 1 | சாதாரண சேமிப்பு. |
| 1403 தபால்,தொலைத்தொடர்பு | 11 | 16,326,000 | - | - | 16,326,000 | 14,898,046 | - | 14,898,046 | 1,427,954 | 9 | செலவுகள் மீதான கட்டுப்பாடு கொடுப்பனவுக்கான தேவை |
| 1404 வாடகையும்,உள்ளூராட்சி சபைகளுக்க | 11 | 230,000 | - | - | 230,000 | 229,217 | - | 229,217 | 783 | 0 | ஏற்படாமை |
| 1409 ஏனையவை | 11 | 26,299,000 | - | - | 26,299,000 | 26,252,694 | - | 26,252,694 | 46,306 | 0 | சாதாரண சேமிப்பு. |
| மொத்தம்(ஈ) | | 48,919,000 | - | 600,000 | 49,519,000 | 48,002,587 | - | 48,002,587 | 1,516,413 | | |
| மொத்தச் செலவினம் (அஆஇஈ) | | 134,187,000 | - | - | 134,187,000 | 131,431,524 | - | 131,431,524 | 2,755,476 | | |
| குறிப்பு - 7 செலவு விடயரீதியான மாற்றங்கள்,நன்கொடைகள்,மானியங்கள் | | | | | | | | | | | |
| **மாற்றங்கள்** | | | | | | | | | | | |
| 1506 அரசாங்க ஊழியர்களுக்கான உடமை | 11 | 4,255,000 | - | - | 4,255,000 | 4,085,699 | - | 4,085,699 | 169,301 | 4 | சொத்துக்கடனுக்கான விண்ணப்பம் குறைந்தமை |
| குறிப்பு - 8 -செலவு விடயரீதியான வட்டிக் கொடுப்பனவுகள் | | 1,019,500,000 | - | - | 1,019,500,000 | 992,834,937 | 751,965 | 992,834,937 | 26,665,063 | | |

11

| செலவினக் குறியீடு | நிதியீடு (குறியீட்டு இல) | ஏற்பாடுகள் | | | | செலவினம் | | | தேறிய விளைவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு (1) | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2) | நி.ஒ66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஏற்பாடு | காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம் | நி.ஒ.208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (விளைவிலி) | மொத்தச் செலவினம் 7ஐ(5)(6) | சேமிப்பு/மிகை | திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு/மிகை | வேறுபாட்டுக்கான காரணம் |
| மூலதனச் செலவினம் | | | | | | | | | | | |
| நிகழ்ச்சித்திட்டம் 1 | | | | | | | | | | | |
| பொது முதலீடுகளின் செலவு விடய ரீதியான வகுப்பீடு | | | | | | | | | | | |
| குறிப்பு 10 மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும் | | | | | | | | | | | |
| 2001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 11 | 7,378,000 | - | - | 7,378,000 | 7,374,584 | - | 7,374,584 | 3,416 | 0 | சாதாரண சேமிப்பு |
| 2002 பொறி இயந்திரம் உபகரணம் | 11 | 783,000 | - | - | 783,000 | 713,423 | - | 713,423 | 69,578 | 9 | கொடுப்பனவுக்கான தேவை ஏற்படாமை |
| 2003 வாகனங்கள் | 11 | 2,037,000 | - | - | 2,037,000 | 1,724,380 | - | 1,724,380 | 312,620 | 15 | |
| மொத்தம்(அ) | | **10,198,000** | - | - | **10,198,000** | **9,812,386** | - | **9,812,386** | **385,614** | | |
| குறிப்பு -11 மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | | | | | | | | | | | |
| 2102 தளபாடங்களும் அலுவலக உபகரணம் | 11 | 6,586,000 | - | - | 6,586,000 | 6,582,231 | - | 6,582,231 | 3,769 | 0 | சாதாரண சேமிப்பு. |
| 2103 பொறி இயந்திரம் உபகரணம் | 11 | 7,670,000 | - | - | 7,670,000 | 7,667,159 | - | 7,667,159 | 2,841 | 0 | சாதாரண சேமிப்பு. |
| 2104 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 11 | 34,180,000 | - | - | 34,180,000 | 34,179,763 | - | 34,179,763 | 237 | 0 | சாதாரண சேமிப்பு. |
| மொத்தம்(ஆ) | | **48,436,000** | - | - | **48,436,000** | **48,429,153** | - | **48,429,153** | **6,847** | | |
| குறிப்பு 14 மனித வள அபிவிருத்தி | | | | | | | | | | | |
| 2401 பயிற்சியும் , இயலளவும் கட்டியெழு | 11 | 566,000 | - | - | 566,000 | 397,059 | - | 397,059 | 168,941 | 30 | கொடுப்பனவுக்கான தேவை ஏற்படாமை |
| மொத்தம் (உ) | | **566,000** | - | - | **566,000** | **397,059** | - | **397,059** | **168,941** | | |
| ஏனைய மூலதனச் செலவினம் | | | | | | | | | | | |
| மொத்தம் (ஊ) | | | | | | | | | | | |
| செலவினங்கள் (அ+ ஆ+ இ+ உ+ ஊ) | | 59,200,000 | - | - | 59,200,000 | 58,638,598 | - | 58,638,598 | 561,402 | | |
| முழுமொத்தம் (குறிப்பு 5-15) | | 1,078,700,000 | - | - | 1,078,700,000 | 1,051,473,534 | 751,965 | 1,051,473,534 | 27,226,466 | | |

திகதி: 2021.02.

M.I.M. Musthafa
Chief Accountant
District Secretariat
Ampara

# 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பணி முற்பணக் கணக்குகள்

செலவின தலைப்பு இல :270

அமைச்சின் பெயர்:. திணைக்களம் : மாவட்ட செயலகம் அம்பாறை

| முற்பணம் கணக்கு இலக்கம் | ஜனவரி 1 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி 1 | | | கிடைக்கப்பெற்ற பணிமுற்பணம் 2 | | | தீர்க்கப்பட்ட பணிமுற்பணம 3 | | | 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பணி முற்பணக் கணக்குகள் | | | திறைசேரி புத்தகங்களின் படி 2020 31 இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொடுத்து தீர்க்கப்படாத உப முற்பணம் 1(i) | தீர்க்கப்படாத பணிமுற்பணங்கள் (தீர்க்கப்படாத உப பணிமுற்பணங்கள் | மொத்தம் 1(iii) | திறைசேரி 2(i) | ஏனைய மூலங்கள் 2(ii) | மொத்தம் 2(iii) | செலவினம் 3(i) | காசு 3(ii) | மொத்தம் 3(iii) | தீர்க்கப்படாத உப பணிமுற்பண மீதி 4(i) | தீர்க்கப்படாத பணி முற்பணங்கள் 4(ii) | மொத்தம் 4(iii) | |
| | | | | | | | | | | | | | |
| 7002/0/0/0288/0020 | - | - | - | 4,737,886,844 | 1,552,437,559 | 6,290,324,403 | 6,290,324,403 | - | 6,290,324,403 | - | - | - | - |

1. மேலே 4 மற்றும் 5 மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டுக்கான
(1) பணம் அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்படாத 2020.12.31 திகதியன்று மீதி -
(2) ஏனைய காரணங்கள............................ -

-

*இந்த மீதிகள் அறிக்கையை முடிவுறுத்தும் போது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பின் அது பற்றியும் அவ்வாறில்லையெனில் காரணங்களையும் குறிப்பிடுக.
மேலே குறிப்பிட்ட தகவல்கள் சரியானவை என சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்காளர்
எம்.ஐ.எம்.முஸ்தபா
திகதி: 2021.02.

M.I.M. Musthafa
Chief Accountant
District Secretariat
Ampara

17

# 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் கூற்று

செலவின தலைப்பு இல :270

அமைச்சின் பெயர்.'. திணைக்களம் : மாவட்ட செயலகம் அம்பாறை

| வைப்புக் கணக்குகளின் பெயர் | வைப்பு இலக்கம் | திணைக்களம் புத்தகங்களின் படி | | | | திறைசேரிப் புத்தகங்களின் படி 2020 ஏசம்பர்31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | 2020 ஜனவரி 1 இல் உள்ளவாறு மீதி | வருடக் காலப்பகுதியில் வரவு வைக்கப்பட்டது | வருடக் காலப்பகுதியில் பற்று வைக்கப்பட்டது | 2020.டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | |
| வைப்புக் கணக்குகள் | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) பிணை வைப்புக்கள் | 6000/0/0/0001/0089 | 3,490,667 | 6,971,625 | 8,494,835 | 1,967,457 | **1,967,457** |
| (ii) கேள்விமனு வைப்புக்கள் | 6000/0/0/0002/0119 | 2,226,178 | 2,688,500 | 2,257,334 | 2,657,344 | **2,657,344** |
| (iii) மாகாண சபைகளுக்க்கு வருமானங்களை மாற்றுதல் | 6000/0/0/0014/0013 | 26,748,956 | 283,504,455 | 301,232,550 | 9,020,861 | **9,020,861** |
| (iv) நிர்மாணத்திற்காக வைத்திருந்த பணம் | 6000/0/0/0016/0067 | 256,256,194 | 143,083,280 | 264,743,486 | 134,595,988 | **134,595,988** |
| (v) நட்டஈடு | 6000/0/0/0017/0020 | 808 | 825 | 1,633 | 0 | **0** |
| (vi) செலவினத்தின் மீள்நிரப்பலுக்காகக் கிடைத்த நிதி | 6000/0/0/0020/0011 | 69,310,739 | 844,923,580 | 853,423,516 | 60,810,804 | **60,810,804** |
| | | | | | | |
| முழு மொத்தம் | | **358,033,542** | **1,281,172,265** | **1,430,153,353** | **209,052,454** | **209,052,454** |

பிரதான கணக்காளர்
எம்.ஐ.எம்.முஸ்தபா
திகதி: 2021.02. 12

M.I.M. Musthafa
Chief Accountant
District Secretariat
Ampara

18

# 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்குகள்

செலவின தலைப்பு இல :270 அமைச்சின் பெயர்.·. திணைக்களம் : மாவட்ட செயலகம் அம்பாறை

ரூபா.

| முற்பண கணக்குகளின் பெயர் | முற்பண கணக்கு இலக்கம் | முற்பண கணக்குகளின் எண்ணிக்கை | 2020 ஜனவரி 1 இல் உள்ளவாறு மீதி (1) | செலவினத்தின் அதிகபட்ச எல்லைகள் ரூபா …….. | | பெறுகைகளின் அதிகபட்ச எல்லை ரூபா …….. | | பற்று மீதியின் அதிகபட்ச எல்லை ரூபா ………… | பொறுப்புக்பகளின் அதிகபட்ச எல்லை ரூபா ………… | திறைசேரிப் புத்தகங்களின்படி 20209 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வருடத்தினுள் பற்று வைத்தல் (2) | | வருடத்தினுள் வரவு வைத்தல் (3) | | உள்ளவாறு மீதி 4ஸ்ரீ(1)+(2)-(3) | | |
| | | | | காசாக | குறுக்குப் பதிவுகளினூடாக | காசாக | குறுக்குப் பதிவுகளினூடாக | | | |
| (1) அரசாங்க அலுவலர்களின் முற்பணம் | 8493/0/0/270/27001 | 20 | 211,464,703 | 44,775,019 | 3,542,927 | 43,711,615 | 8,160,246 | 207,910,788 | - | 207,910,788 |
| | | | **211,464,703** | **44,775,019** | **3,542,927** | **43,711,615** | **8,160,246** | **207,910,788** | - | **207,910,788** |



பிரதான கணக்காளர்
எம்.ஐ.எம்.முஸ்தாபா
திகதி: 2021.02. 12

M.I.M. Musthafa
Chief Accountant
District Secretariat
Ampara

# நடைமுறையல்லா சொத்துக்கள் பற்றிய கூற்று - 2020

செலவின தலைப்பு இல :270 அமைச்சின் பெயர்/ திணைக்களம் : மாவட்ட செயலகம் அம்பாறை ரூபா

| | நடைமுறையல்லா சொத்துக்கள் | குறியீடு | (1) 01.01.2020 அன்று மீதி | (1) 2020.12.31 நிலவரப்படி திருத்தப்பட்ட இருப்பு | (2) கொடுக்கல் வாங்கல்கள் 2(1) கொள்வனவு: கொள்வனவு மூலம் | 2(1) மாற்றல் மூலம்: நடைமுறைப் பதிவிலிருந்து | 2(1) மாற்றல் மூலம்: மொத்தம் | 2(2) விற்பனை: விற்பனை மூலம் | 2(2) மாற்றல் மூலம் | 2(2) மொத்த அகற்றல் 2(2) | 2(3) தேறிய கொடுக்கல் வாங்கல்கள் 2(3)=2(1)-2(2) | (3) மாற்றங்கள் [illegible] 3(1) | ஏனைய மாற்றம் (-)/+ 3(2) | தேறிய மாற்றம் 3(3)=3(1)+/-3(2) | 31.12.2020 அன்று மீதி 4=1+2(3)+3(3) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 611 | **1,377,458,356** | 1,413,407,654 | **14,249,390** | **34,490,679** | **48,740,069** | **(28,032,135)** | **(596,500)** | **(28,628,635)** | **20,111,434** | - | **(6,325,000)** | **(6,325,000)** | **1,427,194,087** |
| | **Building and Structures** | 6111 | **581,014,231** | 581,374,231 | - | - | - | - | | - | - | - | - | - | 581,374,231 |
| | **Dwellings** | 61111 | **69,914,383** | 69,914,383 | - | - | - | - | | - | - | - | - | - | 69,914,383 |
| | Garages | 6111102 | 3,577,594 | 3,577,594 | | | - | | | - | - | | | - | 3,577,594 |
| | Hotels and Restaurants | 6111106 | 2,581,118 | 2,581,118 | | - | - | | | - | - | | | - | 2,581,118 |
| | Quarters | 6111107 | 44,685,671 | 44,685,671 | | | - | | | - | - | | | - | 44,685,671 |
| | Circuits Bunglows | 6111108 | 19,070,000 | 19,070,000 | | | - | | | - | - | | | - | 19,070,000 |
| | | | 69,914,383 | 69,914,383 | - | - | - | | - | - | - | - | - | - | 69,914,383 |
| | **Non Residential Building** | 61112 | **511,099,849** | 511,459,849 | - | **310,916** | 310,916 | - | | - | **310,916** | - | - | - | 511,770,765 |
| | Office Building | 6111201 | 508,113,146 | 508,473,146 | - | 310,916 | 310,916 | | | - | **310,916** | | | | 508,784,062 |
| | Building for Public Entertaintmen | 6111204 | 2,986,703 | 2,986,703 | | | - | | | - | - | | | | 2,986,703 |
| | | | 511,099,849 | 511,459,849 | - | 310,916 | 310,916 | - | | - | **310,916** | - | - | - | 511,770,765 |
| | **Other Non Financial Assets** | 6113 | | - | | | - | - | | - | - | - | - | - | - |
| | **Work in Progress** | 61131 | **3,163,770** | 3,163,770 | - | **34,179,763** | 34,179,763 | | - | - | **34,179,763** | | | | 37,343,533 |
| | WIP Building &Structure | 611140 | **3,163,770** | 3,163,770 | - | 33,622,915 | 33,622,915 | | | - | **33,622,915** | | | | 36,786,685 |
| | Office Building | 611148 | | - | - | 556,848 | 556,848 | | | - | **556,848** | | | | 556,848 |
| | | | 3,163,770 | 3,163,770 | - | 34,179,763 | 34,179,763 | - | | - | **34,179,763** | - | - | - | 37,343,533 |
| | **Machinery and Equipment** | 6112 | **618,351,355** | 653,940,653 | **14,249,390** | - | **14,249,390** | - | **(596,500)** | **(596,500)** | **14,845,890** | | (6,325,000) | | 683,035,932 |
| | **Transport Equipment** | 61121 | **289,019,100** | 295,994,100 | **18,500** | - | 18,500 | - | **(596,500)** | **(596,500)** | **615,000** | - | **(6,325,000)** | **(6,325,000)** | **290,302,600** |
| | Passenger Vehicles | 6112101 | 276,504,600 | 282,504,600 | 18,500 | | 18,500 | | | - | **18,500** | | (3,002,000) | (3,002,000) | 279,539,600 |
| | Agricultural Vehicles | 6112103 | 11,518,000 | 12,468,000 | | | - | | | - | - | | (3,323,000) | (3,323,000) | 9,145,000 |
| | Motor Cycles | 6112109 | 996,500 | 1,021,500 | | | - | | (596,500) | **(596,500)** | **596,500** | | - | - | 1,618,000 |
| | | | **289,019,100** | **295,994,100** | **18,500** | - | **18,500** | - | | - | **18,500** | | **(6,325,000)** | **(6,325,000)** | **289,706,100** |

# நடைமுறையல்லா சொத்துக்கள் பற்றிய கூற்று - 2020

செலவின தலைப்பு இல :270 அமைச்சின் பெயர்/ திணைக்களம் : மாவட்ட செயலகம் அம்பாறை

ரூபா

| | நடைமுறையல்லா சொத்துக்கள் | குறியீடு | (1) 01.01.2020 அன்று மீதி | (1) 2020.12.31 நிலுவைப்படி திருத்தப்பட்ட இருப்பு | (2) கொடுக்கல் வாங்கல்கள் 2(1) கொள்வனவு: கொள்வனவு மூலம் | 2(1) மாற்றல் மூலம்: நடைமுறைப் பதிவிலிருந்துயில் | 2(1) மாற்றல் மூலம்: மொத்தம் | 2(2) விற்பனை: விற்பனை மூலம் | 2(2) விற்பனை: மாற்றல் மூலம் | 2(2) மொத்த அகற்றல் 2(2) | 2(3) தேறிய கொடுக்கல் வாங்கல்கள் 2(3)=2(1)-2(2) | (3) மாற்றங்கள்: கையிருப்பு கொறுன 3(1) | வலின் மாற்றம் (-)/+ 3(2) | தேறிய மாற்றம் 3(3)=3(1)+/-3(2) | 31.12.2020 அன்று மீதி 4=1+2(3)+3(3) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **Other Machinery and Equipment** | **61122** | **329,332,255** | 357,946,553 | **14,230,890** | - | 14,230,890 | **(28,032,135)** | | **(28,032,135)** | **42,263,025** | - | - | - | **414,440,467** |
| | Office Equipment | 6112201 | 36,330,992 | 41,279,872 | 1,354,358 | - | 1,354,358 | (2,824,365) | | **(2,824,365)** | **4,178,723** | | | | **46,812,952** |
| | Computer Equipment | 6112202 | 101,292,488 | 107,805,042 | 3,099,149 | | 3,099,149 | (10,803,602) | | **(10,803,602)** | **13,902,751** | | | | **124,806,942** |
| | Electrical Equipment | 6112203 | 48,686,209 | 53,579,222 | 2,256,753 | | 2,256,753 | (5,120,813) | | **(5,120,813)** | **7,377,566** | | | | **63,213,540** |
| | Communication Equipment | 6112204 | 9,720,652 | 11,669,993 | 2,355,179 | | 2,355,179 | (1,021,300) | | **(1,021,300)** | **3,376,479** | | | | **17,401,650** |
| | Furniture | 6112205 | 131,908,257 | 142,163,767 | 5,158,252 | | 5,158,252 | (7,959,305) | | **(7,959,305)** | **13,117,557** | | | | **160,439,576** |
| | Sports Equipment | 6112208 | 76,200 | 76,200 | | | - | (64,000) | | **(64,000)** | **64,000** | | | | **140,200** |
| | Paintings,Sculptures and other anti | 6112209 | 6,400 | 6,400 | | | - | - | | - | - | | | | **6,400** |
| | Books, Periodicals and Jour | 6112210 | 9,450 | 9,450 | | | - | (450) | | **(450)** | **450** | | | | **9,900** |
| | Laboratory Instruments | 6112211 | 69,200 | 69,200 | | | - | (10,000) | | **(10,000)** | **10,000** | | | | **79,200** |
| | Industrial and manufacturing Equip | 6112212 | 36,000 | 36,000 | | | - | (10,000) | | **(10,000)** | **10,000** | | | | **46,000** |
| | Construction Equipment | 6112213 | 70,250 | 70,250 | 7,200 | | 7,200 | (47,300) | | **(47,300)** | **54,500** | | | | **131,950** |
| | Broadcasting Equipment | 6112214 | 888,245 | 943,245 | | | - | (160,000) | | **(160,000)** | **160,000** | | | | **1,103,245** |
| | Defence Equipment | 6112215 | 4,000 | 4,000 | | | - | | | - | - | | | | **4,000** |
| | Agricultural and Dairy Farm Equip | 6112216 | 223,912 | 223,912 | | | - | (1,000) | | **(1,000)** | **1,000** | | | | **224,912** |
| | Fire protection Equipment | 6112217 | 10,000 | 10,000 | | | - | (10,000) | | **(10,000)** | **10,000** | | | | **20,000** |
| | | | **329,332,255** | 357,946,553 | **14,230,890** | - | 14,230,890 | (28,032,135) | | **(28,032,135)** | **42,263,025** | - | - | - | **414,440,467** |
| 4 | | **614** | **174,929,000** | 174,929,000 | - | - | - | | - | - | - | - | | - | **174,929,000** |
| | | **6141** | **174,929,000** | 174,929,000 | | | - | | | - | - | | | | **174,929,000** |
| | | | 174,929,000 | 174,929,000 | | | - | | | - | - | | | | **174,929,000** |

பிரதம கணக்காளர்
எம்.ஐ.எம்.முஸ்தபா
திகதி: 2021.02.12

M.I.M. Musthafa
Chief Accountant
District Secretariat
Ampara



23

3.6 ***வருமான சேகரிப்பு செயலாற்றுகை***

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % |
| 10.03.07.02 | பதிவுக் கட்டணம் (பதிவாளர் நாயகம் திணைக்களம்) | 21,250,000.00 | 21,250,000.00 | 18,104,174.03 | 85.19% |
| 10.03.07.03 | வனப் பாதுகாப்புத்துறை வருவாய் | 2,000,000.00 | 2,000,000.00 | 1,679,080.12 | 83.95% |
| 10.03.07.05 | உரிம கட்டணம் (பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடையது) | 220,000.00 | 220,000.00 | 297,345.00 | 135.15% |
| 10.03.07.09 | காபன் வரி | - | - | 100.00 | |
| 10.03.07.99 | ஏனையவை (உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் தொடர்புடையது) | 7,000,000.00 | 8,100,000.00 | 4,720,345.82 | 58.27% |
| 20.02.01.01 | அரச கட்டடம் மற்றும் வீட்டுவசதிக்கான வாடகை | 3,300,000.00 | 3,300,000.00 | 2,479,140.09 | 75.12% |
| 20.02.01.03 | காணி மற்றும் ஏனையவைக்கான வாடகை | 35,000,000.00 | 35,000,000.00 | 37,769,349.48 | 107.91% |
| 20.02.02.99 | வட்டி மற்றும் ஏனையவை | 10,400,000.00 | 9,800,000.00 | 8,909,141.98 | 90.90% |
| 20.03.02.13 | பரீட்சை மற்றும் ஏனைய கட்டணங்கள் | 200,000.00 | 200,000.00 | 194,700.00 | 97.35% |
| 20.03.02.14 | மோட்டார் போக்குவரத்து சட்டம் மற்றும் ஏனைய ரசீதுகளின கட்டணம் | 85,000,000.00 | 85,000,000.00 | 83,175,591.19 | 97.85% |
| 20.03.02.03 | தனிநபர் பதிவுக் கட்டணம் | 5,600,000.00 | 5,600,000.00 | 5,648,950.00 | 100.87% |
| 20.03.02.99 | பலவித சில்லறை வஸ்த்துக்கள் | 3,000,000.00 | 3,000,000.00 | 1,743,142.00 | 58.10% |
| 20.03.04.00 | | - | - | (45,000.00) | |
| 20.03.07.00 | நெல் விற்பனை | | | 313,536,663.47 | |
| 20.03.99.00 | பிற ரசீதுகள் | 17,000,000.00 | 17,000,000.00 | 17,598,796.25 | 103.52% |
| 20.04.01.00 | மத்திய அரசுக்குரிய வருவாய் | 62,000,000.00 | 62,000,000.00 | 61,953,111.00 | 99.92% |
| 20.06.02.02 | நிலையான சொத்து விற்பனை மற்றும் ஏனையவை | 175,000.00 | 175,000.00 | 218,830.00 | 125.04% |

## 3.7 *ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை*

ஏசீஏ - 2

**2020 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினங்கள்**

செலவின தலைப்பு இல : 270 அமைச்சின்/திணைக்களத்தின்/மாவட்ட செயலகம் அம்பாறை

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | செலவினத் தலைப்பு | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்த தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3) | மொத்தச் செலவினம் (5) | தேறிய பெறுபேறு மீதி/மேலதிகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** |
| நிகழ்ச்சித் திட்டம் (1) | | | | | | | |
| (a) இருப்பின் மீதி (DGSA 3) | (1)மீண்டெழும் | 1,019,500,000 | - | 7,100,000<br>(7,100,000) | 1,019,500,000 | 992,834,937 | 26,665,063 |
| (b) மூலதனம் (DGSA 4) | (2) மூலதனம் | 59,200,000 | - | - | 59,200,000 | 58,638,598 | 561,402 |
| **மொத்தம்** | | **1,078,700,000** | **-** | **-** | **1,078,700,000** | **1,051,473,534** | **27,226,466** |

## 3.8 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

| தொடர் இல. | அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல்ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 1 | புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | கலாசார நிலையங்களை புனர்நிர்மானம் செய்தல் (101-2-5-0-2001) | 500,000.00 | 500,000.00 | 499,973.58 | 99.99% |
| 2 | | மதத்தளங்களை அபிவிருத்தி செய்தல் -2020 (101-2-6-7-2205) | 4,553,943.92 | 4,553,943.92 | 3,138,897.49 | 68.92% |
| 3 | | மதத்தளங்களை அபிவிருத்தி செய்தல்-2019 (101-2-6-8-2205) | 1,655,956.10 | 1,655,956.10 | 1,149,956.10 | 69.44% |
| 4 | | நிலையான மத மேம்பாட்டுத் திட்டம் (101-2-6-9-2205) | 1,195,000.00 | 1,195,000.00 | 1,194,358.80 | 99.94% |
| 5 | கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு | 118-2-14-59-2506 | 140,000.00 | 140,000.00 | 140,000.00 | 100.00% |
| 6 | புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு (கலாசார பிரிவு) | கலாசார மையத்தினைப் புதுப்பித்தல்- 123-2-5-0-2001) | 475,000.00 | 475,000.00 | 200,000.00 | 42.11% |
| 7 | | கலாசார மையத்தினை நிர்மானித்தல் (123-02-05-23-2104) | 4,026,559.00 | 4,026,559.00 | - | 0.00% |
| 8 | வுனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 284-01-01-08-2105 | 5,488,084.04 | 5,488,084.04 | 4,534,916.59 | 82.63% |
| 9 | கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம் | ஆராய்ச்சி அலுவலகத்தை புனரமைத்தல் (290-01-01-0-2001) | 201,980.33 | 201,980.33 | 198,000.00 | 98.03% |
| 10 | பாதுகாப்பு அமைச்சு (தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் | பாதுகாப்பு மையத்தை மேம்படுத்தல் (130-02-08-13-2202) | 1,000,000.00 | 1,000,000.00 | 969,140.00 | 96.91% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | நிதி அமைச்சு (சமூர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு) | ஆலோசனை அறை நிர்மானித்தல் (414-02-07-08-2509) | 300,000.00 | 300,000.00 | 248,499.00 | 82.83% |
| 12 | சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு | 416-01-02-5-2202 (11) | 500,000.00 | 500,000.00 | 500,000.00 | 100.00% |
| 13 | நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு | 425-02-03-008-2506 | 470,000.00 | 470,000.00 | 469,532.50 | 99.90% |

## 3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

| ரூபா ,000 | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 2020.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி | 2020.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 581,685,147.19 | 581,685,147.19 | | 100% |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 632,865,521.72 | 632,865,521.72 | | 100% |
| 9153 | காணி | 174,929,000.00 | 174,929,000.00 | | 100% |
| 9154 | அருவமான சொத்துக்கள் | - | - | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | 37,343,532.52 | 37,343,532.52 | | 100% |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | - | - | | |
| | | | | | |

## 3.10 *கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை*

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. ENP/AM/A/Dist.Sec/SR/2020 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2021 யூன் 22

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
அம்பாறை.

**அம்பாறை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பளியுள்ள அபிப்பிராயம்**

அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව  இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை  No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34  +94 11 2 88 72 23  ag@auditorgeneral.gov.lk  www.naosl.gov.lk

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிற்கான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாறை மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த அண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாட்டுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பளியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்க இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மாவட்டச் செயலகத்தின் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன், அம் முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ச) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்கள் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.2.1 (ஆ) (i) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பற்றிய பதிவேடு மீளாய்வாண்டில் பேணப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகள் பேணப்படல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் விற்பனையின் மூலம் பெறப்பட்ட ரூபா 522,734 தொகை ஏனைய வருமானத் தலைப்புகளின் கீழ் (2006-0-2-0-20) ரூபா 218,830 தொகையாக தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

#### 1.6.2.1 நிதியல்லாச் சொத்துக்கள்

நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள நிதியல்லாச் சொத்துக்கான (ஏ.சீ.ஏ – 6) திருத்தப்பட்ட ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் திறைசேரி அச்சுப்பிரதியுடன் இணங்கியிருக்கவில்லை.

#### 1.6.2.2 நிதிச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 08 பிரதேச செயலகங்களினால் பயன்படுத்தப்படும் 32 அலுவலக கட்டிடங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனமொன்றிற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட விபத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 707,072 தொகையும் மற்றும் இவ் இழப்பீட்டிற்கு எதிராக காப்புறுதி கம்பனியிடம் பெறப்பட்ட ரூபா 372,026 தொகையும் நிதிக்கூற்றில் நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய குறிப்பு (i) எனும் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) அம்பாறை நகர சபைக்கு செலுத்த வேண்டிய சோலைவரி ரூபா 245,914 தொகை நிதிக்கூற்றில் பொறுப்புக்கள் பற்றிய குறிப்பு (iii) எனும் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நடைமுறையல்லா சொத்துக்களின் கூற்று ஏ.சீ.ஏ-6 இல் காட்டப்பட்ட ரூபா 1,413,407,654 தொகையான திருத்தப்பட்ட ஆரம்ப மீதிகளுக்கான இணக்க கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அம்பாறை மாவட்ட செயலகத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | நிதிப்பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| மின்சார உபகரணப் பதிவேடு | 454 (2) | பேணப்பட்டிருக்கவில்லை |
| பிணைப் பதிவேடு | 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் கையிலுள்ள பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 5,804,101,000 தொகையான கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதும் ரூபா 4,737,886,844 தொகையான கட்டுநிதி மாத்திரமே கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் கோரப்பட்ட கட்டுநிதி மற்றும் உள்ளவாறு கிடைத்த கட்டுநிதிக்கு இடையிலான வேறுபாடு ரூபா 1,066,214,156 ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் ஏனைய பெறுகைகளுக்காக ரூபா 427,470,000 தொகை வருமான மதிப்பீடாக மேற்கொள்ளப்பட்டிருந்தும் சேகரிக்கப்பட்ட உள்ளவாறான வருமானம் ரூபா 557,983,460 தொகையாக இருந்தது.

### 2.3 செலவின முகாமைத்துவம்

நிதி அமைச்சின் 2019 ஜுன் 17 ஆந் திகதிய 04/2019 இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் பிரிவு 02(II) இன் பிரகாரம், மின்சார பட்டியலில் 5 சதவீதத்தினை சேமிப்பதற்கு கவனம் செலுத்துமாறு பணிக்கப்பட்டிருந்தும் இதற்கு முரணாக வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 2 சதவீதம் மாத்திரமே மாவட்ட செயலகத்தினால் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 23 : 18 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்கள் தீவுக்கு வெளியே கழிக்கின்ற லீவுகள் தொடர்பான அறிக்கையொன்றினை தயாரித்து திணைக்களத் தலைவர் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொதுநிர்வாக சுற்றறிக்கை இல 30/2016 திகதி 2016 திசெம்பர் 29 | மாவட்ட செயலகத்தினால் பயன்படுத்தப்படும் 24 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரச நிதி சுற்றுநிருபம் | |
| (i) 01/2020 இன் பகுதி 1 இன்13.2 ஆம் பிரிவு | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான பாவனைக்குதவாத அகற்றப்பட வேண்டிய 29 வாகனங்கள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 02/2020 இன் பந்தி எண் 10.1 இன் 3.5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் 5 சதவீதத்திற்கு மேற்பட்ட மூன்று மூலதன செலவீன சேமிப்பு தொடர்பாக தகுந்த காரணங்களை குறிப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 நிலுவைக் கடன் மீதிகளை அறவிடப்படாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,616,650 தொகையாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டதுடன் அவற்றை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

### 2.6 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்தினால் சேகரிக்கப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமான ரூபா 9,401,882 தொகையை உரிய அமைச்சுகளுக்கு அல்லது திணைக்களங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளில் செலுத்த வேண்டிய மதுபானச் சாலை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 2,455,800 தொகையினை குறிப்பிட்ட திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(இ) மேற்குறிப்பிட்ட பிரதேச செயலகத்தினால் இந்துக் கோயில்களை புனரமைப்பு செய்வதற்காக மீளாய்வாண்டில் புத்த சாசனம், கலாச்சாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 650,000 தொகையினை உரிய காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உஹன பிரதேசத்தில் கலாச்சார நிலையம் அமைப்பதற்காக புத்தசாசனம், கலாச்சாரம் மற்றும் மத அலுவலக அமைச்சிலிருந்து 2020 பெப்ரவரி 02 ஆந் திகதி ரூபா 4,026,559 தொகை நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், இவ் நிர்மாண பணிகளுக்கான பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினால் இந்நிதியேற்பாடு திருப்பியனுப்பப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) சம்மாந்துறை மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகங்களிற்கு வீதி புனரமைப்பு மற்றும் மின்சார இணைப்பிற்காக கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சினால் மீளாய்வாண்டில் ரூபா 2,500,000 தொகை நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தும் சாத்தியவள அறிக்கைகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் உரிய காலத்தினுள் சமர்ப்பிக்கப்படாததனால் இச்செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

(இ) கல்முனை பிரதேச செயலக பிரிவிலுள்ள கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் உள்ளக அரங்கொன்றை நிர்மாணிப்பதற்காக பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நல்லிணக்க அமைச்சினால் 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 தொகை நிதியேற்பாடாக வழங்கப்பட்டிருந்தும் இச்செயற்திட்டம் குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

### 3.1.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் மகாஓயா பிரதேசத்தில் முதியோர் பராமரிப்பு நிலைய நிர்மாண செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம், 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 ஒக்டோபர் 13 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. இந்த ஒப்பந்தம் ரூபா 2,488,475 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2021 ஏப்ரல் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 1,082,799 தொகையான அதாவது மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 43 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காஞ்சிரங்குடா பயிற்சி நிலைய பால் பெறுமதி சேர் நிலையம் மற்றும் விற்பனை நிலைய நிர்மாண செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு 2018 திசெம்பர் 10 ஆந் திகதி நிர்மாணப்பணிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. இவ் ஒப்பந்தம் ரூபா 4,000,000 தொகைக்கு இரண்டு கட்டங்களாக மகளிர் அபிவிருத்தி சங்கமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2021 ஏப்ரல் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அக்குறிப்பிட்ட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீள்குடியேற்ற கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை பாவங்கேணி வடக்கு 4 மற்றும் 5 குறுக்கு வீதிகளுக்கு கொங்றீட் இடும் செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2020 ஏப்ரல் 28 ஆந் திகதி கொங்கிறீட் இடும் வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டு கையிலுள்ள காசோலையாக ரூபா 1,388,532 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2021 மே 10 ஆந் திகதி வரை அவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 08/2017 இலக்கமும் 2017 மார்ச் 29 ஆந் திகதியும் கொண்ட திவிநெகும சுற்றறிக்கை மற்றும் டீஎஸ்டீ/எச்ஓ/எஸ்டபிள்யூ/14/16 இலக்கமும் 2019 செப்தெம்பர் 10 ஆம் திகதியும் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், குடும்ப உறுப்பினர்களை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி மானிய முத்திரை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணான 10 சமுர்த்தி வங்கிகளினால் வழங்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 2,993,215 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்டகால குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கிருந்தமை தொடர்பில் 4 பிரதேச செயலகங்களினால் அறவிடவேண்டிய குத்தகை நிலுவையான ரூபா 5,271,471 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 6 அரச விடுதிகளிலிருந்து அறவிடவேண்டிய வாடகையான ரூபா 338,531 தொகையினை 2002 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 42-8880 இலக்க வாகனம் 20 வருடங்களுக்கு மேலாக திருத்தத்திற்காக கராஜ்சில் ஒப்படைக்கப்பட்டிருந்தும் அதனை மீளப்பெறுவதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெற்றிடமாக காணப்படும் 76 கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமையினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நிர்வாக நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியியின் 2364 காணப்பட்டிருந்தும் உள்ளபடியான பதவியணியின் 2164 ஆக காணப்பட்டது. எனினும், வெற்றிடமாகக் காணப்படும் 200 ஆளணியினரை நிரப்புவதற்கு பொருத்தமானவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

எம். என். அபேசிறி
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

# 04. அத்தியாயம் 04 – செயல்திறன் குறிகாட்டி

## 4.1 *நிறுவனத்தினது செயல்திறன் குறிகாட்டி (செயல் திட்டத்தினை அடிப்படையாக கொண்டது)*

| குறிப்பிடப்பட்ட குறிகாட்டி | எதிர்பார்க்கப்பட்ட விளைவு வீதத்தின் உண்மை விளைவு | | |
|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** |
| கிராமிய நீர் வழங்கலோடு தொடர்பானது | - | - | 35.94% |
| கிராமிய பாதைகள் அமைத்தல் | - | - | 47.67% |
| பொருளாதார உட்கட்டமைப்பு வழங்கியமை | - | - | 50.09% |
| கிராமிய பொருளாதார செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியமை | - | - | 63.66% |
| சமூக நலனோம்பு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியமை | - | - | 57.34% |
| கிராமிய மின்சார இணைப்புக்களை வழங்கியமை | - | - | 40.60% |
| வாழ்வாதார அபிவிருத்தி வழங்கப்பட்டமை | - | - | 37.94% |
| சனசமூக அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியமை | - | - | 67.29% |
| வசதிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டமை | - | - | 60.01% |
| சுத்திகரிப்பு வசதிகள் வழங்கப்பட்டமை | - | - | 53.63% |
| மத தலங்கள் புனருத்தாபனம் செய்யப்பட்டமை | - | - | 48.94% |
| ஏனைய உட்கட்டமைப்புக்கள் | - | - | 56.21% |

# 05. அத்தியாயம் 05 – நிலையான அபிவிருத்தி இலக்கு (SDG) அடைவுகளது செயல்திறன்

## 5.1 *அடையாளம் காணப்பட்ட அந்தந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடவும்*

| நிலையான அபிவிருத்தி இலக்கு (SDG) அடைவுகளது செயல்திறன் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **இலக்கு இல** | **இலக்கு/குறிக்கோள்** | **அடைவுகள்** | **அடைவுகளது குறிகாட்டிகள்** | **அடைவுத் திகதியன்றான முன்னேற்றம்** | | |
| | | | | **0% - 49%** | **50%-74%** | **75% - 100%** |
| **1** | எல்லா இடங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல் | 02) பல்வேறு மூலங்களிலிருந்து வளங்களை கணிசமாக திரட்டுவதை உறுதிசெய்தல் | 1.) மாவட்டத்தில் கிராமப்புற உற்பத்தியை மேம்படுத்த 58 பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. (RIDP) | 48.00% | | |
| | | | 2.) மாவட்டத்தில் 37 நீர் வழங்கல் நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது | | | |
| **2** | பட்டினியை முடிவுக்குக் கொண்டு, உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்தை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல் | 1.) 2030 ஆம் ஆண்டளவில், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் விவசாய உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை இரட்டிப்பாக்குங்கள் | 1.) மஞ்சள் தோட்டத் திட்டம் உகன பி.செ பிரிவில் ஆரம்பிக்கப்பட்டது | | 51.00% | |
| | | | 2.) 818 அபிவிருத்தி திட்டங்களில் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக கிராம வீதிகள், கல்வெட்டுகள், பாலங்கள், பக்க வடிகால் போன்றவை | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **3** | எல்லா வயதினருக்கும் அனைவருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிசெய்தல் நல்வாழ்வை ஊக்குவிக்கவும் | 1.) 2030 ஆம் ஆண்டளவில், தடுப்பு மற்றும் சிகிச்சையின் மூலம் தொற்றுநோயற்ற நோய்களிலிருந்து மூன்றில் ஒரு பங்கு முன்கூட்டிய இறப்பைக் குறைத்து மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல் | 1.) பெரிய மற்றும் சிறிய கிராமப்புற விளையாட்டு மைதானங்கள் 67 புதுப்பிக்கப்பட்டு வலுவான ஆரோக்கியமான நிலையில் நோயற்று வாழ்வதற்காக உருவாக்கப்பட்டமை. | | 55.00% | |
| | | | 2.) 35 கழிப்பறைகள் நிர்மானிக்கப்பட்டு சுகாதாரத்திற்காக புதுப்பிக்கப்பட்டன | | | |
| | | 2.)2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சமமான துப்பரவு மற்றும் சுகாதாரத்தை அடைதல் | 1.) 35 கழிப்பறைகள் நிர்மானிக்கப்பட்டு சுகாதாரத்திற்காக புதுப்பிக்கப்பட்டன | | | |
| **4** | அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நிலையான மற்றும் நவீன ஆற்றலுக்கான வழியினை உறுதி செய்தல். | 1.) 2030 ஆம் ஆண்டளவில் மலிவான, நம்பகமான மற்றும் நவீன எரிசக்தி சேவைகளுக்கான உள்ளூர் வழியினை உறுதிசெய்தல் | 1.)16 பாடசாலைகளுக்கு மின்சார வசதிகள் வழங்கப்பட்டன | 49.00% | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **5** | சிறந்த உள்கட்டமைப்பை உருவாக்குதல், ஊக்குவிப்பினை உள்ளடக்குதல் மற்றும்  மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை உருவாக்குதல் | 1) பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்காக பிராந்திய மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட தரமான, நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்திறன் உள்கட்டமைப்பை உருவாக்குதல் | 1.) கான்கிரீட் வீதிகள், கெரவல் வீதிகள், பாலங்கள், கல்வெட்டுகள் மற்றும் கிராமப்புற பாதைக்கு தேவையான பக்க வடிகால் ஆகியவை நிலையான தொழில்மயமாக்கலுக்கும் புதுமைகளை வளர்ப்பதற்கும் உருவாக்குதல் | | 57.00% | |
| | | 2 சிறிய தொழில்துறை மற்றும் பிற நிறுவனங்களின் அணுகலை அதிகரித்தல் | 2.) தொழில்மயமாக்கலை உள்ளடக்கிய  வகையில் மேம்படுத்துவதற்காக வாராந்த சந்தைகள் போன்ற உள்கட்டமைப்பு உருவாக்கப்படுதவதற்கு உதவுதல் | | | |

## 5.2 *நிலையான வளர்ச்சி இலக்குகளின் சாதனை மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குதல்*

- பொதுவாக, ஒதுக்கீட்டை முன்னறிவிப்பதன் மூலம் வருடாந்த செயல் திட்டத்தை நாங்கள் தயார் செய்யும் அதேவேளை இந்த ஒதுக்கீடுகள் செயல் திட்டத்தின் அடிப்படையில் பெறப்படுவதில்லை.
- எங்கள் செயல் திட்டத்தில் உள்ளடங்காத சில ஒதுக்கீடுகள் அமைச்சிலிருந்து நேரடியாக பெறப்படுகின்றன.
- ஒதுக்கீட்டின் அடிப்படையில், எங்களால் பணியை நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் முடிக்க முடியவில்லை
- அம்பாரை மாவட்டத்தில் சில பி.செ பிரிவுகள் இன்னும் வெற்றிடங்களை நிரப்பவில்லை. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளுக்காக தெகியத்தக்கண்டி மற்றும் பதியதலாவ பிரதேச செயலகங்களில் பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
- கிராம மட்ட கள உத்தியோகத்தர்களுக்கு (SO, GN & EDO) தங்களுக்கு பொறுப்பான கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை ஆய்வு செய்ய போதுமான தொழில்நுட்ப அறிவு இல்லாமை.
- அனைத்து துறைகளையும், மாவட்டத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக SDG இலக்குகளின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் விகிதாசாரமாக விநியோகிக்கப்படல் வேண்டும்.

# 06. அத்தியாயம் 06 – மனித வள விபரம்

## 06.1 *பதவியணி முகாமைத்துவம்*

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவிவெற்றிடம் / (அதிகப்படியான)** |
|---|---|---|---|
| சிரேட்ட | 13 | 11 | 2 |
| மூன்றாம் நிலை | 4 | 3 | 1 |
| இரண்டாம் நிலை | 80 | 72 | 8 |
| ஆரம்ப நிலை | 40 | 36 | 4 |
| மொத்தம் | 137 | 122 | 15 |

## *06.2* பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

அம்பாறை மாவட்ட செயலகத்தில் 2020.12.31 ஆம் திகதியில் ஊழியர் பணிக்குழுவின் விபரத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட ஆளனி 137 என்பதுடன் தற்போதுள்ள எண்ணிக்கை 122 ஆகும். அதற்கு ஏற்ப தேவைப்பாடு உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஆகும். அதனுள் பதவிநிலை உத்தியோகத்தர்களின் தேவைப்பாடு 02 ஆகும். இருந்தாலும், மேலதிக மாவட்ட செயலாளர்கள் 02 பேர் கடமையில் ஈடுபட்டுள்ள படியாலும் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லாத உத்தியோகத்தர்களின் தேவைப்பாட்டிற்காக பயிலுனர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அச்சேவையினை நிறைவேற்றுகின்ற படியினால் ஏனைய உத்தியோகத்தர்களின் தேவைப்பாட்டினை நிறைவேற்றும் பொருட்டு செயல்முறை பயிற்சிகளில் ஈடுபடும் பயிலுனர் உதவியாளர்களைக் கொண்டு சேவையினை நிறைவேற்றுவதனால் நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு தடையில்லாத விதத்தில் முழுமையான மட்டத்தில் சேவையை நிறைவேற்ற இயலுமாய் உள்ளது.

## 06.3 *மனித வள அபிவிருத்தி*

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | வெளியீடு/பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| பொறியியல் முறைமை | 36 | 01 நாள் | 28,095.00 | - | உள்நாட்டு | தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழிநுட்ப உதவியாளர்களின் தவறுகளைக் குறைத்தல். |
| - | - | - | - | - | - | - |
| | | | | | | |
| | | | | | | |

# 07. அத்தியாயம் 07– இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | - | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | - | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | ஏனைய | - | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA - N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறிவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 6 | **உள்ளகக் கண்காய்வு** | | | |
| 6.1 | நி. பி. 134 (2) டி.எம்.ஏ / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | 75% | 25% கோவிட் 19 | மாற்று முறைகள் கையாளப்படும் (சமூக ஊடகங்கள் வழியாக) |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | 50% | 50% | அகற்றும் பணிகளுக்கு ஏற்ப பல்வேறு அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |
| 10 | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல். | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திரு த்தல். | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 14 | **முன்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 15 | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்குதல் | | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 17 | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 18 | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமானது | | |
| 19 | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | *செய்ய வேண்டும்.* | | | |
| *19.3* | *மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.* | *50%* | *50%* | சுற்றுநிருபத்திற்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |
| *19.4* | *மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.* | இணக்கமானது | | |
| *20* | ***கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்*** | | | |
| *20.1* | *முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்* | இணக்கமானது | | |

**முற்றும்**